தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 30.09.2013

### வரத்து அதிகரித்ததால் காய்கறிகளின் விலை குறைந்தது

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆந்திரம், மகாராஷ்டிரம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலும் இருந்து காய்கறிகள் விற்பனைக்காக லாரிகள் மூலம் கொண்டுவரப்படுகின்றன.

கடந்த சில நாள்களுக்கு முன்பு வரை வெங்காயம், முட்டைக்கோஸ், புடலை, பீட்ரூட் உள்ளிட்ட காய்கறிகளின் விலை அதிகரித்து காணப்பட்டது. தற்போது மார்க்கெட்டுக்கு கொண்டுவரப்படும் காய்களின் வரத்து அதிகரித்துள்ளதால் காய்கறிகளின் விலை கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.20 வரை குறைந்துள்ளது.

சனிக்கிழமை நிலவரப்படி காய்கறிகளின் விலை (அடைப்புக் குறிக்குள் பழைய விலை- ஒரு கிலோ):

வெங்காயம் - ரூ.50 (65)

புடலை - ரூ.15 (20)

முட்டைக்கோஸ் - ரூ.8 (15)

பீட்ரூட் - ரூ.12 (18)

இஞ்சி - ரூ.120 (160)

பச்சை மிளகாய் - ரூ.13 (30)

கத்தரிக்காய் - ரூ.22 (28)

நூல்கோல் - ரூ.13 (20)

உருளைக்கிழங்கு - ரூ.17 (17)

கொத்தவரை - ரூ.13 (20)

காய்கறிகளின் விலை குறைவு குறித்து கோயம்பேடு மார்க்கெட் மொத்த வியாபாரி சௌந்தரராஜன் கூறியது: கடந்த சில வாரங்களாக தமிழகத்தில் தஞ்சாவூர், விழுப்புரம், மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் சராசரி மழைப்பொழிவைக் காட்டிலும் சற்று அதிக மழை பெய்தது. இதனால் காய்கறிகளின் சாகுபடி வழக்கத்தை விட அதிகரித்து உள்ளது. உற்பத்தி அதிகரித்ததால் அந்த பகுதிகளில் இருந்து மார்க்கெட்டுக்கு கொண்டு வரப்படும் காய்கறிகளின் வரத்தும் அதிகரித்து உள்ளது. இதனால் பெரும்பாலான காய்கறிகளின் விலை குறைந்துள்ளது. இதனால் ஹோட்டல் உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் காய்கறிகளை அதிகளவில் வாங்கிச்செல்கிறார்கள் என்று சௌந்தரராஜன் கூறினார்.

## நிலக்கோட்டையில் கடும் வறட்சி: தென்னை விவசாயம் பாதிப்பு

நிலக்கோட்டை தாலுகாவில் கடும் வறட்சி காரணமாக தென்னை விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக இப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் இந்த ஆண்டு பருவமழை மிகவும் குறைவாகப் பெய்துள்ளது. மேலும் நிலக்கோட்டை தாலுகாவில் மழை பெய்யாததால் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக நிலக்கோட்டை தாலுகாவில் உள்ள பட்டிவீரன்பட்டி, நிலக்கோட்டை, பழைய வத்தலக்குண்டு, விராலிப்பட்டி, எழுவனம்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள தென்னை விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

நிலக்கோட்டை தாலுகாவில் சுமார் 50 ஆயிரம் தென்னை மரங்கள் காய்ந்ததால் அதை வெட்டி எடுக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். சென்ற வருடம் அதிக காய்கள் வரத்து இருந்த தென்னை மரங்களும் தற்போது காய்ந்துள்ளன . இப்பகுதியில் நிலத்தடி நீர் வெகுவாக குறைந்ததால் கிணறு மற்றும் ஆள்துளை கிணறுகளில் தண்ணீர் இல்லை. இதனால் மா, தென்னை விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது தேங்காய் வரத்து குறைந்துள்ளதால் தேங்காய் விலை உயர்ந்துள்ளது. வத்தலக்குண்டு, அய்யம்பாளையம், நிலக்கோட்டை பகுதிகளில் தேங்காய் ரூ. 5 வரை மொத்த வியாபாரிகள் கொள்முதல் செய்துள்ளனர். இதனால் சில்லரை விற்பனைக்கு ரூ. 7 முதல் 10 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதன் காரணமாகத் தேங்காய் விலை உயர்ந்துள்ளது.

தென்னை விவசாயத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தென்னை மரத்துக்கு ரூ. 5 ஆயிரம் வரை நிவாரணம் வழங்க வேண்டும் எனவும், தென்னை விவசாயிகள் வாங்கிய விவசாயக் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## டிச. 15இல் தேனியில் அகில இந்திய விவசாயிகள் மாநாடு

அகில இந்திய விவசாயிகள் சங்க மாநில மாநாட்டை டிச.15,16,மற்றும் 17ஆம் தேதிகளில் தேனியில் நடத்த இங்கு நடந்த இச்சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அகில இந்திய விவசாயிகள் சங்க மாநிலத் தலைவரும் பெரியகுளம் சட்டப் பேரவை உறுப்பினருமான ஏ.லாசர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்துக்கு, பொதுச் செயலர் ஜி.மணி முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ், பயனாளி ஒருநாளில் மேற்கொள்ள வேண்டிய வேலையின் அளவு 42 கன அடி என்று அரசு நிர்ணயித்துள்ளதை 24 கன அடியாக குறைக்க வேண்டும்.

பயனாளிகளுக்கு ஊராட்சி நிர்வாகம் சார்பில் வேலை உபகரணங்கள் வழங்க வேண்டும்.

மேற்கொள்ளப்பட்ட பணி, வழங்கப்பட்ட தினச் சம்பளம் ஆகியவற்றை வேலை அட்டையில் அன்றாடம் பதிவு செய்ய வேண்டும்.

தமிழகத்தில் வீடு இல்லாத 30 லட்சத்துக்கும் மேற்பட்ட ஏழை, எளியோர் இலவச வீட்டு மனைப் பட்டா கோரி அரசிடம் விண்ணப்பித்து பல ஆண்டுகளாக காத்திருக்கின்றனர். தகுதியுள்ளவர்களுக்கு உடனடியாக வீட்டு மனைப் பட்டா வழங்கவும், அரசு தரிசு மற்றும் புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டி வசித்து வரும் மக்களுக்கு நிலம் வகை மாற்றம் செய்து பட்டா வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வறட்சியால் பாதிக்கப்பட்டு பட்டுப்போன தென்னை மரங்களுக்கு மரம் ஒன்றுக்கு ரூ.2,000 வீதம் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தேனியில் வரும் டிச.15-ம் தேதி முதல் 17-ம் தேதி வரை அகில இந்திய விவசாயிகள் சங்கம் சார்பில் 8-வது மாநில மாநாட்டை நடத்துவது, மாநாட்டை முன்னிட்டு டிச.15-ம் தேதி தென் மாவட்ட விவசாய தொழிலாளர்கள் பங்கேற்கும் பேரணி நடத்துவது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மாநில துணைத் தலைவர்கள் மொக்கராசு, சந்திரன், வசந்தாமணி, சங்கர், துணைச் செயலர் குணசேகரன், பொருளாளர் கலியன், மாவட்டச் செயலர் ஏ.வி.அண்ணாமலை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வளர்ப்புப் பிராணிகள் விற்பனை கடைகளுக்கு தொழில் வரி

சென்னையில் வளர்ப்புப் பிராணிகள் விற்பனை கடைகளுக்கு தொழில் வரி விதிப்பதற்கான தீர்மானம் சென்னை மாநகராட்சிக் கூட்டத்தில் சனிக்கிழமை நிறைவேற்றப்பட்டது.

சென்னை மாநகராட்சியின் சாதாரண மன்றக் கூட்டம் ரிப்பன் கட்டடத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேயர் சைதை துரைசாமி தலைமை வகித்தார். ஆணையர் விக்ரம் கபூர் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் அம்மா உணவகங்களுக்கு மானிய விலையில் தமிழக அரசிடம் அரிசி கோருவது, 34 ஆயிரத்து 425 குழல் மின் விளக்குகள் அமைப்பது, பல்வேறு இடங்களில் பழுதடைந்த கழிவறைகளை இடிப்பது உள்ளிட்டவை தொடர்பான 72 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஒப்பந்த விதிகளில் புதிய நிபந்தனை: தார்சாலை மற்றும் கான்கிரீட் சாலைப்பணிகள் பட்டியல் வழங்குவதற்கு முன் உரிய தரக்கட்டுப்பாட்டு சோதனைகள் செய்யப்பட்டுள்ளது என்ற சான்றிதழை தொழில்நுட்ப தணிக்கை குழுமத்தின் மூலம் பெறவேண்டும். அந்த பணிகளில் தொழில்நுட்ப தணிக்கை குழுமம் குறைந்தபட்சம் 10 சதவீதப் பணிகளின் தரத்தை ஆய்வு செய்து, அதன்பேரில் மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நிபந்தனையை ஒப்பந்த விதிகளில் கூடுதலாக சேர்க்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வளர்ப்புப் பிராணிகள் கடைகளுக்கு தொழில் வரி: இதேபோல, சென்னையில் உள்ள வளர்ப்புப் பிராணிகளுக்கான உணவுப் பொருள்கள் தயாரிப்பு, விற்பனை மற்றும் வளர்ப்புப் பிராணிகள் பராமரிப்புக்கு பயன்படும் பொருள்கள் விற்கும் கடைகளுக்கு தொழில் வரி விதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது குறித்து அரசுக்கு பிரேரணை அனுப்பி அரசாணை கோருவதற்கான தீர்மானம் சனிக்கிழமை நிறைவேற்றப்பட்டது.

இதேபோல, சென்னை மாநகராட்சியின் கூடுதல், இணை மற்றும் துணை ஆணையர்கள் அரசு குடியிருப்பு ஒதுக்கீடு கிடைக்கப்பெறாது இருந்தால், அவர்களுக்கு அரசு குடியிருப்பு ஒதுக்கீடு கிடைக்கும் வரை தாற்காலிகமாக மாநகராட்சியின் விருந்தினர் இல்லத்தினை ஒதுக்கீடு செய்வதற்கான தீர்மானம் உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முதல்வருக்கு நன்றி: இதேபோல, சென்னையின் குடிநீர் தேவைக்காக புதிய நீர்த் தேக்கம் கட்டப்படும் என்று அறிவித்தது, ஈரான் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 16 தமிழக மீனவர்களை விடுவித்தது, ரூ. 10-க்கு அம்மா குடிநீர் விற்பனை தொடங்கி வைத்தது, சினிமா நூற்றாண்டு விழாவுக்கு ரூ. 10 கோடி ஒதுக்கி அதில் கலந்து கொண்டது

உள்ளிட்டவற்றுக்காக தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

## வாடிப்பட்டி பேரூராட்சி மண்புழு உரப் பண்ணையில் பீமா மூங்கில் நடவு

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி பேரூராட்சி மண்புழு உரப் பண்ணையில் மூங்கில் செடிக் கன்றுகளை, பேரூராட்சித் தலைவர் கிருஷ்ணவேணி நடவு செய்து தொடக்கி வைத்தார்.

வாடிப்பட்டி பேரூராட்சியில் 8 ஆவது வார்டில் உள்ள ரெங்கசமுத்திரம் குளக்கரையில் உள்ள மண்புழு உரப் பண்ணையில், இயற்கை காய்கறி தோட்டம், மண்புழு உரம் தயாரிக்கும் கூட வளாகத்தின் சுற்றுச்சுவர் கரையோரப் பகுதிகளில், அடர்ந்து வளரக்கூடிய பீமா மூங்கில் நடவு செய்ய வேண்டும் என பேரூராட்சிகளின் இயக்குநர் உத்தரவிட்டிருந்தார்.

அதனடிப்படையில், இந்த மூங்கில் செடிக் கன்றுகளை பேரூராட்சித் தலைவர் கிருஷ்ணவேணி நடவு செய்து தொடக்கி வைத்தார்.

அப்போது, செயல் அலுவலர் ராஜேந்திரன், சுகாதாரப் பணி மேற்பார்வையாளர் கண்ணன், உதவி மேற்பார்வையாளர் மருதையா மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.

## பருவ மழை தாமதம் : திருவாடானை பகுதி விவசாயிகள் கவலை

திருவாடானை, ஆர்.எஸ்.மங்கலம், அஞ்சுகோட்டை, ஆதியூர், தொண்டி, நம்புதாளை, எஸ்.பி.பட்டினம் போன்ற பகுதிகளில் சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பளவில் நெல் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் 2-ஆவது நெல் களஞ்சியம் எனப்படும் இப்பகுதியில் சுமார் 1 லட்சம் ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் மும்மரமாக விவசாயப் பணிகளில் ஈடுபட்டு தற்போது நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் விதை முளைப்பு வரும் நேரத்தில் பருவ மழை தாமதாகி வருவதால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர். இன்னும் சில நாட்களில் மழை பெய்யாவிட்டால் முளை கட்டிய விதை வீணாகி விடும் எனத் தெரிவித்தனர்.

இது குறித்து திருவாடானை விவசாயி நாகநாதன் கூறுகையில், இப்பகுதியில் பருவ மழை ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் துவங்கி விடும். அதே போல் இந்த ஆண்டும் கடந்த சில தினங்களுக்கு முன் பருவ மழை தூரல் விழத் துவங்கியதால் விவசாயிகள் நெல் விதைகளை வயல்களில் விதைக்கத் துவங்கி விட்டனர். இந்நிலையில் மழை இல்லாமல் கடும் வெயில் தாக்கி வருவதால், முளைத்த பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டு ஆயிரக்கணக்காண ரூபாய் செலவு செய்தும் இருப்பில் இருந்த நெல் விதைகளும்

வீணாகி விடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் காப்பீடு செய்தும், இதுவரை காப்பீட்டுத் தொகை கிடைக்கவில்லை. ஆகையால் பெரும்பாலான விவசாயிகள் காப்பீடு செய்யாமல் உள்ளனர். எனவே சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் தக்க நடவடிக்கை எடுத்து காப்பீட்டுத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பருத்தி செடிகளை பாதுகாக்க விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி யோசனை

பருத்தியை தாக்கி பாழ்படுத்தும் பூச்சிகளை கட்டுப்படுத்த வேளாண் துறையினர் விவசாயிகளுக்கு யோசனை தெரிவித்துள்ளார்.

திருச்சுழி, காரியாபட்டி, அருப்புக்கோட்டை வட்டாரங்களில் அதிகளவில் விவசாயிகள் பருத்தி சாகுபடி செய்துள்ளனர். தற்போது பருத்தி சாகுபடி செய்யப்பட்டு 20 முதல் 25 நாள் பயிர்களாக வளர்ந்துள்ளன. இப்பருவத்தில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சி, இலைப்பேன், அசுவினி மற்றும் வெள்ளை ஈயின் தாக்குதல் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

இந்த பூச்சிகளின் தாக்குதலினால் செடிகள் மஞ்சள் நிறமடைந்து பயிர் வளர்ச்சி குன்றி காணப்படும். தாக்குதல் அதிகமிருந்தால் செடிகள் வாடி கருகி விடும். இதுகுறித்து கோவிலாங்குளம் வேளாண்மை அறிவியல் நிலைய பயிர் பாதுகாப்புத் துறை தொழில் நுட்ப வல்லுனர் ராஜேந்திரன் பயிர் பாதுகாப்பு உத்திகளை கடைப்பிடித்து பூச்சிகளை கட்டுப்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு தெரிவித்துள்ள ஆலோசனைகள்:

பருத்தி விதைகளை ஊடுருவி பாயும் பூச்சிக்கொல்லியான இமிடாகுளோபிரிட் மருந்தை 1 கிலோ விதைக்கு 5 மி.லி. என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். பயிர் முளைத்த 20 முதல் 25 நாளில் இமிடாகுளோபிரிட் மருந்து ஏக்கருக்கு 40 மி.லி. என்ற அளவிலும் அல்லது ரோகார் மருந்து ஏக்கருக்கு 300 மி.லி. என்ற அளவிலும் பயிரில் தெளிக்க வேண்டும்.

குருணை மருந்துகளான பியூரடான் அல்லது போரேட் மருந்துகளை ஏக்கருக்கு 5 கிலோ என்ற அளவில் 3 பங்கு மணலுடன் கலந்து மண்ணில் இடவேண்டும்.

தாவர பூச்சிகொல்லிகளான வேப்ப எண்ணெய் 3 சதம் அல்லது வேப்பங்கொட்டை சாறு 5 சதம் என்ற அளவிலும் பயிரில் தெளிக்க வேண்டும். ஊடு பயிராக தட்டைப்பயறு, சூரியகாந்தி மற்றும் மக்காச்சோளம் பயிரிட்டால் நன்மை செய்யும் பூச்சியான பொறி வண்டின் எண்ணிக்கை பெருகி அசுவினி, தத்துப்பூச்சி மற்றும் இலைப் பேனின் தாக்குதலை குறைந்து விடும். மஞ்சள் வண்ண ஒட்டும் பொறி ஏக்கருக்கு 10 என்ற அளவில் வைத்து வெள்ளை ஈயின் தாக்குதலை குறைக்க வேண்டும்.

## "உரத்தை அதிக விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை'

திருச்சுழி வட்டாரம், ம.ரெட்டியபட்டி வேளாண்மை விரிவாக்க மையத்தில் உரங்கள் மற்றும் பூச்சி மருந்து சில்லறை விற்பனையாளர்களுக்கான கூட்டம் நடைபெற்றது. அப்போது வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்ததாவது: உர மூட்டையில் குறிப்பிட்டு உள்ள விலையின்படியே யூரியா, டி.ஏ.பி., பொட்டாஷ் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்களை முறையாக பில் போட்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும். விற்பனை பட்டியலில் விவசாயிகளின் முழு முகவரி, கையெழுத்து இடம் பெற்றிருக்க வேண்டும். உர விற்பனை நிலையங்களில் உர இருப்பு மற்றும் உரவிலை குறித்த அறிவிப்புப் பலகை அவசியம் வைக்கப்பட வேண்டும். இதை மீறி செயல்படும் உர விற்பனையாளர்கள் மீது உரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் காலாவதியான பூச்சி மருந்துகளை விற்பனை செய்யக்கூடாது. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் பூச்சி மருந்துகளை மட்டும் இருப்பு வைத்து விற்பனை செய்ய வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பயிர் மகசூல் அதிகரிக்க விவசாயிகளுக்கு பயிற்சி

பரமக்குடி வட்டத்தில் சுப்பராயபுரம், கமுதக்குடி, பரளை, தோளூர், இடையாத்தூர் ஆகிய 5 கிராமங்களில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெற விவசாயிகளுக்கு பயிர் திட்ட அடிப்படையிலான பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

முதல் கட்டமாக சனிக்கிழமை சுப்பராயபுரத்தில் நடைபெற்ற பயிற்சிக்கு வேளாண்மைத்துறை உதவி இயக்குநர் ச.கண்ணையா தலைமை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவர் செல்லையா முன்னிலை வகித்தார். உதவி வேளாண்மை அலுவலர் மூ.ஜெய்சங்கர் வரவேற்றார். முகாமில் ச.கண்ணையா கூறியது: சான்றுபெற்ற விதைகளை பயன்படுத்துவதன் மூலம் பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்பட்டு, அதிக அளவில் சிம்புகள் தோன்றும். இதனால் அதிக மகசூல் பெற முடியும். விவசாயிகளுக்கு தேவையான சான்று பெற்ற நெல் விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் கிலோவிற்கு ரூ.5 மானிய விலையில் வாங்கிக்கொள்ளலாம்.

நெல் பயிரைத் தாக்கும் நோய்களை வருமுன் காத்திட சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் என்ற பாக்டீரியா கலவையினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் கலந்து விதைப்பு செய்ய வேண்டும். விதை நேர்த்தி செய்ய இயலாத நேரத்தில் வயலில் நேரிடையாக 1 கிலோ கலவையை குப்பையுடன் கலந்து ஒரு ஏக்கரில் போதிய ஈரம் உள்ள பொழுது விதைத்து பயன்பெற வேண்டும். உரச் செலவினை குறைக்க அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியா உயிர் உரத்தினை விதையுடன் கலந்து

விதைக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். முகாமில் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் பா.பொன்னுச்சாமி, வேளாண்மை அலுவலர் லெ.நாராயணமூர்த்தி, விவசாயிகள் நாராயணன், அழகு, பாலகிருஷ்ணன் உள்பட பலர் கலந்துகொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் க.சக்திவேல் நன்றி கூறினார்.

## தேயிலை மீது ஒரே மாதிரியான விற்பனை வரி விதிக்க பரிசீலனை

தேயிலை மீது ஒரே மாதிரியான விற்பனை வரி விதிப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்று வேளாண் துறை அமைச்சர் செ.தாமோதரன் தெரிவித்தார்.

கோவை தேயிலை விற்பனை மையத்தின் ஆண்டு பொதுக் குழுக் கூட்டம், கோவையில் சனிக்கிழமை நடந்தது. இதில் அமைச்சர் செ.தாமோதரன் பேசியது:

தமிழகத்தில் ஆண்டுக்கு 167.2 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தியாகிறது. ஆனால் வால்பாறையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையில் 85 சதவீதம் கேரளத்துக்கு விற்பனைக்குச் செல்கிறது.

கோவையில் தேயிலைப் பூங்கா ஏற்படுத்த தமிழக அரசு ரூ.15 கோடியை ஒதுக்கியுள்ளது.

சிறு, குறு வியாபாரிகள் உற்பத்தி செய்யும் தேயிலைக்கும் பெரிய நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் தேயிலைக்கும் விதிக்கப்படும் வாட் வரியில் வித்தியாசம் உள்ளது. தேயிலை மீது ஒரே மாதிரியான விற்பனை வரி விதிப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும். விரைவில் முதல்வரின் கவனத்துக்கு இந்தப் பிரச்னை கொண்டு செல்லப்பட்டு தீர்க்கப்படும் என்றார் அமைச்சர் தாமோதரன்.

தேயிலை வாரிய செயல் இயக்குநர் அம்பலவாணன்: மேட்டுப்பாளையம் அருகே தேயிலைப் பூங்காவுக்கு 9 ஏக்கர் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. கிட்டங்கி, பாக்கெட் செய்வது, தேயிலை பிளெண்டிங் ஆகிய வசதிகள் படிப்படியாக இங்கு மேம்படுத்தப்படும்.

பாகிஸ்தானிலிருந்து தேயிலை இறக்குமதிக் குழுவினர் வந்து சென்றபின் தேயிலை ஏற்றுமதி அதிகரித்தது. ஆனால் இப்போது சற்றுக் குறைந்துள்ளது என்றார்.

## ரூ.2.07 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம்

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் சார்பில், சேவூர் ஏல மையத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாழைத்தார் ஏலத்தில் ரூ.2.07 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது .

ஏலத்துக்கு மொத்தம் 2,160 வாழைத்தார்கள் வந்திருந்தன. கடந்த வாரம் 765 வாழைத்தார்கள் மட்டும் வந்தன. கடந்த வாரத்தைவிட வாழைத்தார் வரத்து 3 மடங்கு அதிகரித்து இருந்தது. வாழைத்தார் கிலோ ஒன்றுக்கு 20 முதல் ரூ45.80 வரையிலும், கதளி

வாழைத்தார் கிலோ ஒன்றுக்கு ரூ.20 முதல் ரூ.45 வரையிலும் ஏலம் போனது. மொத்தமாக ரூ.2 லட்சத்து 7 ஆயிரத்து 104 வர்த்தகம் நடைபெற்றது.

சக்தி, குருமந்தூர், மலையப்பாளையம், கோபி, திங்களூர், பொள்ளாச்சி, அன்னூர், அவிநாசி, நம்பியூர், பெருந்துறை ஆகிய பகுதிகளிலிருந்து 78 விவசாயிகள் ஏலத்தில் பங்கேற்றனர்.

## மாடுகளுக்கு இலவச கோமாரி நோய் தடுப்பூசி

தாராபுரம் கோட்டம், காங்கயம், வெள்ளக்கோவில் பகுதிகளில் தற்போது மாடுகளுக்கு இலவச கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டு வருவதாக கால்நடை பராமரிப்புத் துறை தெரிவித்துள்ளது.

இந்நோய் கலப்பின மாடுகளை அதிகளவில் பாதித்தாலும் எருமைகள், வெள்ளாடுகள், இரட்டைக் குளம்புகள் கொண்ட பிற கால்நடைகளையும் தாக்கும். நோயால் உயிரிழப்பு குறைவாக இருந்தாலும் மடி நோய், பால் உற்பத்தி குறைவு,சினைப் பாதிப்பு, இளம் கன்றுகளில் இறப்பும் நேரிடுகிறது. மழைக்காலங்களில் ஏற்படும் இந்நோய் தீவனம்,தண்ணீர்,சாணம்,பால்,உமிழ் நீர்,சிறு நீர் மூலம் பிற கால்நடைகளுக்குப் பரவுகிறது.

நோய் பாதித்த கால்நடைகளைத் தனியாக வைத்துப் பராமரிக்க வேண்டும். தகுந்த மருத்துவரின் ஆலோசனைப்படி பராமரிப்பும்,சிகிச்சையும் அளிக்க வேண்டும்.

தேவையான சமயத்தில் தடுப்பூசி போடுவதே நோயைத் தடுக்க சிறந்த வழியாகும்.

தற்போது வெள்ளக்கோவில், தாசநவநாயக்கன்பட்டி, ஓலப்பாளையம், வீரசோழபுரம், மேட்டுப்பாளையம் கால்நடை மருந்தகங்களில் தடுப்பூசி போடும் பணி துவங்கவுள்ளது. எனவே, அந்தந்தப் பகுதி கால்நடை மருத்துவர்களை அணுகிப் பயன்பெறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெறிச்சோடிய இறைச்சிக் கடைகள்: காய்கறி விற்பனை அமோகம்!

புரட்டாசி மாதத்தையொட்டி ஈரோட்டில் இறைச்சிக் கடைகள் வெறிச்சோடின; அதேசமயம், காய்கறி விற்பனை அமோகமாக இருந்தது. ஈரோடு, சம்பத் நகர் உழவர் சந்தையில் ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் 22 டன் காய்கறிகள் விற்றுத் தீர்ந்தன.

புரட்டாசி மாதத்தில் இந்துக்களில் பெரும்பாலோர் அசைவ உணவைத் தவிர்த்து, விரதம் கடைபிடிக்கின்றனர். இதன் காரணமாக இறைச்சி விற்பனை மந்தமாக உள்ளது. கறிக்கோழி விற்பனை குறைந்துவிட்டதால், பண்ணைக் கொள்முதல் விலையும் ரூ. 55

ஆகச் சரிந்து விட்டது. இதேபோல கடல் மீன்களின் விலையும் வழக்கத்தை விடச் சரிவடைந்து காணப்படுகிறது.

இறைச்சி விற்பனை சரிவடைந்துள்ள நிலையில், உழவர் சந்தைகளில் காய்கறி விற்பனை அமோகமாக உள்ளது. ஈரோடு, சம்பத் நகர் உழவர் சந்தைக்கு வழக்கமாக ஞாயிற்றுகிழமைகளில் 20 டன் காய்கறிகள் விற்பனையாகும். ஞாயிறுக்கிழமை (நேற்று) வந்த 22 டன் காய்கறிகளும் காலை 8 மணிக்கே விற்றுத் தீர்ந்தன.

இதுகுறித்து உழவர் சந்தை அதிகாரிகள் கூறுகையில், சுரைக்காய், புடலை, கத்திரி, வெண்டை, முருங்கை போன்ற காய்கறிகளின் வரத்து அதிகமாக இருந்த போதிலும், அவை உடனுக்குடன் விற்றுத் தீர்ந்தன. அதேசமயம் வெங்காயம், தக்காளி வரத்து குறைந்துள்ளது. தேங்காய் வரத்தும் கணிசமாகக் குறைந்துள்ளது என்றனர்.

## அறுவடை நிலையில் வாழைகள் சேதம்: காட்டு யானைகளால் விவசாயிகள் விரக்தி

பவானிசாகர் அருகே அம்மாபாளையம் கிராமத்தில் சாகுபடி செய்யப்பட்ட வாழைகளை காட்டு யானைகள் சேதப்படுத்தியதால், வாழை விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர்.

பவானிசாகர் வனச்சரகத்திற்கு உள்பட்ட விளாமுண்டி வனப்பகுதியில் ஏராளமான யானைகள் உள்ளன. இந்த யானைகள் தினமும் இரவில் வனத்தை விட்டு வெளியேறி வனப்பகுதியை ஒட்டி அமைந்துள்ள கோடேபாளையம், அம்மாபாளையம், வெள்ளாளபாளையம், நால்ரோடு, அண்ணாநகர், சொலவனூர், தொப்பம்பாளையம், கரிதொட்டம்பாளையம் கிராமங்களில் புகுந்து, சாகுபடிப் பயிர்களை சேதப்படுத்துகின்றன.

இதுமட்டுமின்றி பவானிசாகர்- மேட்டுப்பாளையம் சாலையிலும், பவானிசாகர் - புஞ்சைபுளியம்பட்டி சாலையிலும் பகல் மற்றும் இரவு நேரத்தில் வாகனங்களை யானைகள் வழிமறிப்பதால், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்துகிறது.

ஞாயிற்றுக்கிழமை விளாமுண்டி வனத்தை விட்டு வெளிவந்த இரண்டு யானைகள், அம்மாபாளையம்- மேட்டுப்பாளையம் சாலையை ஒட்டியுள்ள விவசாயி அப்புசாமியின் தோட்டத்திற்குள் நுழைந்து அறுவடைக்குத் தயாராக இருந்த கதளி ரக வாழைகளை நாசப்படுத்தின.

தகவலறிந்து அங்கு வந்த வனத்துறையினர் பட்டாசு வெடித்தும் தீப்பந்தங்கள் காட்டியும் அவற்றை விரட்டும் முயற்சியில் ஈடுபட்டனர். இருப்பினும் அவை வாழைத்தோட்டத்தை விட்டு நகரவில்லை.

இரண்டு மணிநேரப் போராட்டத்திற்குப் பிறகு, அவை மெல்ல நடந்து அடுத்துள்ள பழனிசாமி, வரதராஜ் ஆகியோரது தோட்டத்தில் புகுந்து வாழைகளை நாசப்படுத்தின.

இதையடுத்து, கிராம மக்கள், வேட்டைத் தடுப்பு காவலர்கள் மற்றும் வனத்துறையினர் தாரை தப்பட்டையுடன் யானைகளை வனப்பகுதிக்குள் விரட்டினர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 78.09 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 78.09 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 2,548 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,300 கன அடி நீரும், வாய்க்காலில் 2,560 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 14.69 டி.எம்.சி.

## நோய்வாய்ப்பட்ட கோழிகள் தாளூர் பகுதியில் பறிமுதல்

பந்தலூரை அடுத்துள்ள தாளூர் பகுதியில் நோய்வாய்ப்பட்ட கோழிகளை வருவாய்த் துறையினர் ஞாயிற்றுக்கிழமை பறிமுதல் செய்தனர்.

தமிழக- கேரள எல்லையான தாளூர் சோதனைச்சாவடி அருகிலுள்ள ஒரு கோழிக்கடையில் நோய்வாய்ப்பட்ட கோழிகளின் இறைச்சி விற்பனையாவதாக வந்த புகாரை அடுத்து, கூடலூர் கோட்டாட்சியர் வீ.ஜெகஜோதி, பந்தலூர் வட்டாட்சியர் இன்னாசிமுத்து ஆகியோர் கடையை ஆய்வு செய்தனர்.

ஆய்வில், நோய்வாய்ப்பட்ட கோழிகள் விற்பனை செய்வதை உறுதி செய்த அதிகாரிகள், சுகாதார ஆய்வாளர் கனேந்திரனை வரவழைத்து கோழிகளையும் கோழிகளை ஏற்றிவந்த சரக்கு ஆட்டோவையும் பறிமுதல் செய்து எருமாடு காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட கோழிகள் அனைத்தும் குழி தோண்டிப் புதைக்கப்பட்டன.

## 39 ஆயிரம் ஹெக்டேரில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடி

தருமபுரி மாவட்டத்தில் 38,912 ஹெக்டேரில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 40 சதம் காய்கறிகளும், 25 சதம் பழ வகைகளும் அடங்கும்.

இதுகுறித்து மாவட்ட தோட்டக்கலைத் துணை இயக்ககம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தருமபுரி மாவட்ட விவசாயிகள் பயன் பெறும் நோக்கத்தில் தோட்டக்கலைத் துறை பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

அதன்படி, துல்லிய பண்ணைத் திட்டம் மூலம் தக்காளி, கத்தரியும், தேசிய தோட்டக்கலைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள உயர் தொழில்நுட்ப பசுமைக்

குடில்களில் குடை மிளகாய், தக்காளி, செண்டுமல்லியும், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், பாகற்காய், பீர்க்கன் ஆகிய பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் பாகற்காய், முருங்கை, செண்டுமல்லி மற்றும் நல்லம்பள்ளி, அரூர் வட்டாரங்களில் பாமரோசா பயிரில் இருந்து எடுக்கப்படும் வாசனைத் திரவியம் ஆகியவை பக்கத்து மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

பந்தல் காய்கறித் திட்டம்: தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், புதிய பந்தல் காய்கறித் தோட்டம் அமைத்தல், பழைய பந்தல் சாகுபடி தோட்டங்களைப் புதுப்பித்தல் உள்ளிட்ட பணிகள் ரூ.17.48 லட்சத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

போளையம்பள்ளியில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைக்கு மாவட்டப் பொருளாதார மேம்பாட்டுச் சங்கத்திடமிருந்து 6.75 ஏக்கர் நிலம் பெறப்பட்டு பழச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பம்

ராசிபுரம் வட்டாரத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையைப் பின்பற்றுமாறு ராசிபுரம் வேளாண்மை உதவி இயக்குநர் இரா. வரதராஜ் தெரிவித்துள்ளார். இதற்கான தொழில்நுட்பம் குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:

திருந்திய நெல் சாகுபடி முறையில் ஒரு ஏக்கர் நடவு செய்ய இரண்டு கிலோ விதை போதுமானது. ஒரு ஏக்கர் நடவு செய்ய ஒரு மீட்டர் அகலமும் 8 மீட்டர் நீளமும் கொண்ட 5 மேட்டுப் பாத்திகளை அமைத்து, விதைகளை விதைக்க வேண்டும். 14 நாள்கள் ஆன இளம் நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். நடவு வயல் துல்லியமாக சமன் செய்யப்பட வேண்டும்.

நாற்றுகளை நடவு வயலில் 22.5 சென்டி மீட்டருக்கு 22.5 சென்டி மீட்டர் இடைவெளியில் குத்துக்கு ஒரு நாற்று வீதம் நடவு செய்ய வேண்டும்.

நடவு செய்யப்பட்ட 10ஆம் நாள் முதல் 10 நாள்கள் இடைவெளியில் நான்கு முறை கோனாவீடர் கருவியைப் பயன்படுத்தி களையெடுக்க வேண்டும். கோனாவீடர் கருவியைப் பயன்படுத்துவதால் தூர்கள் அதிகமாவதுடன் கதிர்களின் உற்பத்தி எண்ணிக்கையும் அதிகரிக்கும். களைகளை வயலிலேயே அமுக்கி விடுவதால் களைகள் வயலுக்கு உரமாகும். இலை வண்ண அட்டையைப் பயன்படுத்தி தேவையான தழைச்சத்தை மேலுரமாக இட வேண்டும். மேற்கண்ட தொழில்நுட்பங்களைக் கையாண்டு சாகுபடி செய்வதால் சாகுபடி செலவு குறைவதுடன் சராசரியாக ஒரு ஏக்கருக்கு 500 முதல் 1000 கிலோ வரை கூடுதல் மகசூல் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

மேலும் விபரங்கள் அறிய ராசிபுரம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகலாம் என்று தெரிவித்துள்ளார்.

## ஓமலூர் சந்தையில் ஆடுகள் விற்பனை அதிகரிப்பு

ஓமலூரில் சனிக்கிழமை நடைபெற்ற சந்தையில் ஆடுகள் விற்பனை அதிகரித்ததால் விவசாயிகள் மகிழ்ச்சிடைந்தனர்.

புரட்டாசி மாதத்தில் பெரும்பாலானோர் விரதத்தை தொடங்கியுள்ளது ஆடு, கோழிகளின் விற்பனை குறைந்துள்ளது. இதனால், கடந்த வாரம் நடைபெற்ற ஓமலூர் சந்தையில் ஆடுகள் விற்பனை மிகவும் குறைந்து காணப்பட்டது.

இந்த நிலையில், விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளிக்கும் விதமாக, ஓமலூரில் சனிக்கிழமை கூடிய சந்தையில் வளர்ப்பு ஆடுகள் அதிக அளவில் விற்பனையானது. இறைச்சிக்காக ஆடுகள் வாங்கப்படுவது குறைந்து விட்ட நிலையில், குட்டி ஆடுகளை வளர்ப்பதற்காக விவசாயிகள் போட்டி போட்டுக் கொண்டு வாங்கிச் சென்றனர்.

அண்மையில் பெய்த மழை காரணமாக, பல்வேறு நீர் நிலைகள் நிரம்பியுள்ளதோடு, பசுமையான தோற்றத்தோடு மேய்ச்சல் நிலங்களும் உருவாகியுள்ளதால், ஆடுகள்

வளர்ப்பதற்கு ஏதுவான சூழ்நிலை நிலவுவதால், விற்பனை அதிகரித்துள்ளதாக ஓமலூரைச் சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தனர்.

தற்போது ரூ.1500-க்கு வாங்கப்படும் ஆடுகள், அடுத்த சில மாதங்களில் ரூ.6 ஆயிரம் வரை விலை போகும் என்பதால் ஆடுகள் வளர்ப்பில் அதிக அளவு ஆர்வம் காணப்படுகிறது.

இதேபோன்று, இளங் கன்றுகள் விற்பனையும் ஓமலூர் வட்டாரத்தில் அதிகரித்துள்ளன. ஓமலூர் அருகேயுள்ள பெருமாள் கோயில் பகுதியில் நடைபெற்ற மாட்டுச் சந்தையில் ஒரே நாளில் 1,650 இளங் கன்றுகள் விற்பனையாகின.

புரட்டாசி மாதத்தில் இறைச்சிக்கான விற்பனை குறைந்துள்ள நிலையில், வளர்ப்பு ஆடுகள் மற்றும் மாடுகள் விற்பனை அதிகரித்து இருப்பது விவசாயிகளை மகிழ்ச்சியடைய செய்துள்ளது.

## பால் கொள்முதல் விலையை ரூ. 5 உயர்த்த கோரிக்கை

பால் கொள்முதல் விலையை ரூ. 5 உயர்த்தி வழங்க வேண்டும் என முதல்வருக்கு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச் சங்கம் கோரிக்கைவிடுத்துள்ளது.

திருச்சியில் சனிக்கிழமை நடைபெற்ற இச்சங்கத்தின் திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை மாவட்டங்களின் ஒருங்கிணைந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

கடந்த 2011-ஆம் ஆண்டு ஒரு லிட்டர் பாலுக்கு ரூ. 2 கொள்முதல் விலை உயர்வை முதல்வர் ஜெயலலிதா வழங்கினார். இந்த ஆண்டு கடுமையான வறட்சி காரணமாக 31 மாவட்டங்கள் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. பால் உற்பத்திச் செலவு 50 சதவிகிதம் உயர்ந்துள்ளது.

எனவே, பசும்பாலுக்கான கொள்முதல் விலையை ரூ. 20-ல் இருந்து ரூ. 25 ஆக உயர்த்தியும், எருமைப்பாலுக்கு ரூ. 26-ல் இருந்து ரூ. 36 ஆகவும் உயர்த்தி வழங்க வேண்டும். கால்நடைத் தீவனம் கிலோ ரூ. 10-க்கு மானிய விலையில் வழங்க வேண்டும்.

மாவட்ட ஒன்றியங்களில் உள்ள காலிப் பணியிடங்களை முன்னுரிமை அடிப்படையில் நிரப்ப வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு சங்கத்தின் மாநில இணைச் செயலர் என். கணேசன் தலைமை வகித்தார். தலைவர் கே.ஏ. செங்கோட்டுவேல், தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுச் செயலர் ஆர். ராஜாசிதம்பரம், மாவட்டத் தலைவர் ம.ப. சின்னதுரை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### கூடுதல் விலைக்கு உரம் விற்றால் கடும் நடவடிக்கை

அரியலூர் மாவட்டத்தில் கூடுதல் விலைக்கு உரம் விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு காரிப் பருவத்துக்கு தேவையான ரசாயன உரங்கள் கூட்டுறவு மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகம் செய்ய மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.

உர விற்பனை நிலையங்களில் உர உரிமைச் சான்றிதழ், உர இருப்புப் பலகை, உர விலை விபரப் பட்டியல் விவசாயிகளுக்கு தெரியும்படி வைக்க வேண்டும். மேலும் வாடிக்கையாளர்கள் வாங்கும் உர மூட்டைகளுக்கு உரிய எம் படிவத்தில் ரசீது தர வேண்டும். விவசாயிகள் தங்கள் பகுதியில் கூடுதல் விலைக்கு உரம் விற்கும் அல்லது இருப்பு வைத்துக் கொண்டு இல்லையெனக் கூறும் உர விற்பனையாளர்கள் குறித்து அரியலூர் வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்துக்கு 04329228056 என்ற எண்ணிலோ அல்லது அந்தந்த வட்டார வேளாண் உதவி இயக்குநர்களின் எண்ணிலோ தெரிவிக்கலாம். அதிக விலைக்கு உரம் விற்பது தெரிய வந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கக் கோரிக்கை

60 வயதைக் கடந்த ஆண், பெண் தொழிலாளர்களுக்கு மாதம் ரூ. 3000 ஓய்வூதியம் வழங்க வேண்டுமென தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் அரசை வலியுறுத்தியுள்ளது.

தாளப்பட்டியில் அண்மையில் நடைபெற்ற சங்கக் கிளை ஆண்டுவிழாவில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் தாளப்பட்டியில் தெருவிளக்குகளை அதிகளவில் அமைக்க வேண்டும்.

அனைத்துப் பகுதிகளிலும் சிமென்ட் சாலையமைக்க வேண்டும். உழவர் பாதுகாப்பு அட்டை இல்லாதோருக்கு அவற்றை வழங்க வேண்டும்.

வேலை உறுதித் திட்டத்தில் வேலை நாள்களை 200 ஆக உயர்த்தி, கூலியை ரூ. 300 ஆக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

எம். லட்சுமி தலைமை வகித்தார். சங்கத்தின் மாவட்டச் செயலர் ஆர். தங்கவேல் சிறப்புரையாற்றினார்.

எஸ். சுமதி, காந்திமதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்ட முடிவில் தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகள்:

கிளைத் தலைவர் - வி. சித்ரா, துணைத் தலைவர் ராமாயி, செயலர் கே. ராதா, துணைச் செயலர் பூங்கொடி,பொருளாளர் பி. ராமாயி.

## சத்தான உணவுப் பொருள் விழிப்புணர்வு முகாம்

கரூர் லிட்டில் ஏஞ்சல்ஸ் ஆங்கில மேல்நிலைப் பள்ளியில் சத்தான உணவுப் பொருள்கள் குறித்த ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு முகாம் அண்மையில் நடைபெற்றது.

பள்ளித் தாளாளர் வழக்குரைஞர் என். மணிராஜ் தலைமை வகித்தார். முதல்வர் கே. பத்மபிரியா முன்னிலை வகித்தார். ஈரோடு நியுட்டிரிலைட் நிறுவனத்தைச் சேர்ந்த செந்தில்குமார், சித்ரகலா உள்ளிட்டோர் பேசினர்.

அவர்கள் பேசுகையில், உடலுக்கு உரம் சேர்க்கும் சத்தான உணவு எது, காய்கறி, கீரை வகைகள் எவை என்பதை அறிந்து உண்ண வேண்டும். இவ்வாறு இல்லாமல் உடலுக்கு கேடு விளைவிக்கும் என அறிந்தும் விரைவு உணவகங்களில் சாப்பிடுவது,

மேற்கத்திய உணவுப் பழக்கத்தை கையாளுவது போன்றவற்றால் இன்று பலவிதமான புதுப்புது நோய்களுக்கு மக்கள் ஆளாகி துன்பப்படுகின்றனர்.

விலை குறைவாக இருக்கிறது என்று பாராமல் தரமான பொருள்களை, உடலுக்கு ஆரோக்கியமான உண்ண வலியுறுத்தினர். முகாமில் பள்ளியில் உள்ள 100 ஆசிரியைகள் பங்கேற்றனர்.

## விவசாயிகள் பயிற்சி முகாம்

மதுக்கூர் ஒன்றியம், நெம்மேலி ஊராட்சியில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

ஊராட்சித் தலைவர் பொன். ஜகநாதன் தலைமை வகித்தார். மதுக்கூர் வேளாண் துணை இயக்குநர் ஆர். மோகன்தாஸ் எள் சாகுபடியின் முக்கியத்துவம் குறித்துப் பேசினார். வேளாண் அலுவலர்கள் சிவசுப்பிரமணியன், விவேக் ஆகியோர் சம்பா நெல் சாகுபடியில் கூடுதல் மகசூல் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து விளக்கினர். வேளாண் அலுவலர் பாலையன் வரவேற்றார்.

## தடையின்றி பயிர்க் கடன் வழங்க வேண்டும்

சம்பா சாகுபடி விவசாயிகளுக்குத் தடையின்றி பயிர்க் கடன் வழங்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பு) கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் கீழையூர் ஒன்றிய மாநாடு, நாகை மாவட்டம், கீழையூர், புதுப்பள்ளியில் அண்மையில் நடைபெற்றது. சங்கத்தின் நிர்வாகி கே. தவமணி தலைமை வகித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாகை மாவட்டச் செயலர் எம். செல்வராசு சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு, சங்கக் கொடியை ஏற்றி வைத்து, மாநாட்டைத் தொடங்கிவைத்துப் பேசினார்.

விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் எஸ். சம்பந்தம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கீழையூர் ஒன்றியச் செயலர் டி. செல்வம், விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டத் துணைச் செயலர் ஏ. நாகராஜன், ஒன்றியத் தலைவர் டி. கண்ணையன், செயலர் வி. சுப்பிரமணியன், இளைஞர் பெருமன்ற ஒன்றியத் தலைவர் எஸ். ரமேஷ், முன்னாள் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மல்லிகா சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிர்வாகிகள் தேர்வு: தமிழ்நாடு விவசாயிகள் சங்க கீழையூர் ஒன்றியத் தலைவராக கே. தவமணி, துணைத் தலைவர்களாக எஸ். பெருமாள், டி. பாப்பையன், செயலாளராக கே. சீனிவாசன், துணைச் செயலாளர்களாக டி. துரைசாமி, ஆர். முருகேசன், பொருளாளராக எம்.எச். பஷீர் அகமது ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

கீழையூர் மற்றும் சுற்றுப் பகுதிகளில் அதிகளவில் மாங்காய் உற்பத்தி செய்யப்படுவதையொட்டி, இப்பகுதியில் மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலையை அரசு தொடங்க வேண்டும். விதை, உரம் உள்ளிட்டவைகளின் விலை பல மடங்கு உயர்ந்திருப்பதையொட்டி, நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 3 ஆயிரம் வீதம் விலை வழங்க வேண்டும். ஏக்கருக்கு ரூ. 20 ஆயிரம் வீதம் புதிய பயிர்க் கடன் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## "சம்பா பயிரை காப்பாற்ற கூடுதல் தண்ணீர் திறக்க வேண்டும்'

காரைக்காலில் சம்பா பயிரைக் காப்பாற்ற முறை வைக்காமல் தண்ணீர் திறந்துவிட தமிழகத்திடம் புதுச்சேரி அரசு வலியுறுத்த வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரைக்கால் மாவட்டத்தில் காவிரித் தண்ணீரை பயன்படுத்தி விவசாயிகள் விதை தெளித்துள்ளனர். மாவட்டத்தில் அம்பகரத்தூர் சுற்றுவட்டாரப் பகுதியில் ஆழ்குழாய் பாசனம் மூலம் விவசாயிகள் பயிர் செய்யத் தொடங்கினர். மேலும் நேரடி நெல் விதைப்பு முறையிலும் ஒருசிலப் பகுதிகளில் விவசாயிகள் பயிர் செய்யத் தொடங்கினர்.

மாவட்டத்தில் சுமார் 5 ஆயிரம் ஹெக்டேரில் சம்பா சாகுபடிக்கான பணிகள் நடந்து வருவதாக வேளாண் துறை கூறியுள்ளது. ஆனால், ஆறுகளில் முறையாக தண்ணீர் வராததால், பயிர் விளைச்சல் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, மேலகாசாக்குடி மற்றும் திருப்பட்டினம் பகுதியில் மேலையூர், படுதார்கொல்லை உள்ளிட்ட பகுதிகளில், போதிய அளவு தண்ணீர் பாயாததால், முளைத்து வரும் பயிர்கள் பாதிக்கப்படும் என அப்பகுதி விவசாயிகள் கூறுகின்றனர்.

காரைக்கால் பகுதியில் விவசாயத்திற்கு தேவையான தண்ணீர் தடையின்றி கிடைக்க வேண்டும். எனவே, தண்ணீர் திறந்துவிடும் அளவை கூடுதலாக்க அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். புதுச்சேரி வேளாண் அமைச்சர், பொதுப்பணித் துறை, வேளாண் துறை அதிகாரிகள், விவசாயிகளை அழைத்து ஆலோசனை நடத்த வேண்டும்.

மேலும், தேவையான உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் இருப்பில் வைத்திருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## அலங்கார மீன்வளர்ப்பு பண்ணைக்கு மானியம்

அலங்கார மீன் வளர்ப்புப் பண்ணைகள் அமைக்க அரசு மானிய உதவிகள் வழங்குவதாக ஆட்சியர் சி.சமயமூர்த்தி தெரிவித்தார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தோர் தங்களது வீட்டின் பின்புறம் 200, 250 சதுர அடி சொந்த நிலத்தில் அல்லது 7 ஆண்டுகளுக்கான குத்தகை நிலத்தில் அலங்கார மீன்வளர்ப்பு பண்ணை அமைக்கலாம். ரூ.1 லட்சம் முதலீட்டில் இந்தப் பண்ணை அமைக்க தனி நபருக்கு மானியமாக 25 சதவீதமும், சுயஉதவிக் குழு, மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 50 சதமும் மானியம் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர், பழங்குடியினத்தவருக்கு 30 சதம் மானியம் வழங்கப்படும்.

இதேபால, நடுத்தர அளவிலான பண்ணை ரூ. 8 லட்சத்தில் அமைக்கலாம். 300 சதுர மீட்டர் நிலத்தில் அமைக்கப்படும் இந்தப் பண்ணைக்கு தனிநபருக்கு 25 சதவீதமும், ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு 30 சதமும் மானியம் வழங்கப்படும். இவைத் தவிர அலங்கார மீன் வளர்ப்புக்கான கண்ணாடித் தொட்டிகள் வியாபார ரீதியில் அமைக்கவும் மானியம் வழங்கப்படுகிறது. மேலும், விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி: மீன்துறை உதவி இயக்குநர், 1. லட்சுமி நரசிம்மபுரம் தெரு, பாளையங்கோட்டை பேருந்துநிலையம் எதிரில், திருநெல்வேலி, தொலைபேசி எண்: 0462-2581488.

## புதிய தொழில்நுட்பம்: விவசாயிகளுக்கு வேளாண் மாணவிகள் செயல்விளக்கம்

சிதம்பரம் அருகேயுள்ள கடவாச்சேரி கிராமத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்புல இறுதி ஆண்டு மாணவிகள் கிராமத்தில் தங்கிப் பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் பல்வேறு களப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், அந்தக் கிராம விவசாயிகளிடம் வெள்ளிக்கிழமை புதிய வேளாண் தொழில் நுட்பங்கள் குறித்தும், அதிக மகசூல் பெறுவதற்கான செயல்முறை விளக்கத்தை மாணவிகள் செய்து காண்பித்தனர்.

குறிப்பாக, பஞ்சகாவ்யா, காயர்பித் கம்போஸ்டிங், ஊடுபயிர், அயோடின் சோதனை, சோளம் தண்டு துளைப்பான், தென்னைக்கு உரமிடுதல், தென்னைக்கு வேர் மூலம் மருந்தை செலுத்துதல், கவரும் பயிர் மற்றும் வாழைக்கன்று நேர்த்தி செய்தல் உள்ளிட்டவை குறித்து செயல்விளக்கம் அளித்தனர். இதனை விவசாயிகள் ஆர்வத்துடன் கேட்டறிந்தனர்.

தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

## நாற்றுகளை காப்பாற்றநுாதன வேலி

கும்மிடிப்பூண்டி:காப்பு காடுகளை சுற்றியுள்ள விவசாயிகள், பன்றிகளிடம் இருந்து நாற்றுகளை காப்பாற்ற, காற்றில் சத்தம் எழுப்பக்கூடிய, நூதன வேலி அமைத்துள்ளனர்.கும்மிடிப்பூண்டி அடுத்த, மாதர்பாக்கம் அருகே சிறுவாடா, நேமலூர், கண்ணன்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் காப்பு காடுகள் உள்ளன.அந்த காடுகளில், அதிக அளவில் வாழும் காட்டு பன்றிகள், இரவு நேரத்தில், கூட்டமாக சென்று, அருகில் உள்ள விவசாய நிலங்களின், நாற்றுகளை நாசம் செய்வது வழக்கம்.பாதிப்புக்கு ஆளான விவசாயிகள், பன்றிகளிடம் இருந்து நாற்றுகளை காப்பாற்ற, நூதன முறையை கையாண்டு வருகின்றனர். ரிப்பன் போன்று நீண்ட பிளாஸ்டிக் சுருளை கொண்டு, தேவையான பகுதியை சுற்றி பாதுகாப்பு வளையம் ஏற்படுத்தி வருகின்றனர்.இந்த பிளாஸ்டிக் சுருள்கள், காற்றில் வேகமாக அசையும் போது, அதிக சத்தம் எழுப்புகின்றன.அந்த சத்தத்தை கேட்கும் பன்றிகள், அப்பகுதிக்குள் நுழைவதில்லை. இதன் மூலம், நாற்றுகள் காப்பாற்றப்படுகின்றன. இந்த முறையை, கண்ணன்கோட்டை, தேர்வழி, போந்தவாக்கம், சிறுவாடா உள்ளிட்ட 15 கிராம மக்கள் பின்பற்றி வருகின்றனர்.

### இரவு நேரத்தில் பனி பொழிவதால்செஞ்சி பகுதி விவசாயிகள் கவலை

செஞ்சி:தீவிர மழைக்காலத்தில் இரவு நேரத்தில் பனி பொழிவு துவங்கி இருப்பது விவசாயிகளை கவலையடைய செய்துள்ளது.தமிழகத்தில் செப்டம்பர் மாதம் துவங்கி டிசம்பர் மாதம் வரை தீவிர மழை பொழியும். அக். நவம்பர் மாதங்களில் கடும் மழை பொழிவதுண்டு. இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முடிவடைந்த நிலையில் பருவமழை மிக குறைவாகவே பெய்துள்ளது.ஏரிகளை நம்பி சாகுபடி செய்துவரும் வட மாவட்டங்களில் ஏரி, குளங்களில் கால் பங்கு கூட தண்ணீர் வரவில்லை. மழை பொழியும் என நம்பி கிணற்று நீரை கொண்டு பல இடங்களிலும் விவசாயிகள் சாகுபடியை துவக்கி உள்ளனர்.இந்நிலையில் கடந்த சில நாட்களாக இரவில் பனிப்பொழிவு காணப்படுகிறது. செஞ்சி பகுதியில் கடந்த 28ம் தேதி பனிப்பொழிவை பகலிலேயே காண முடிந்தது.மழைக்காலம் முடிவுக்கு வரும் போதே பனிப்பொழிவு துவங்குவது வழக்கம். தீவிர மழைக்காலம் துவங் குவதற்கு முன்பே பனிப்பொழி ஏற்பட்டிருப்பது விவசாயிகளை கலக்கமடைய செய்துள்ளது. கடந்த சில ஆண்டுகளா கவே மழையின் அளவு குறைந்து வரும் நிலையில், தீவிர மழைக்காலத்தில் பனி பொழிவு ஏற்பட்டிருப்பது சீரற்ற பருவ நிலையை உணர்த்துவதாக உள்ளது.

### மயிலத்தில் ஆடு வளர்ப்பு பயிற்சி முகாம்

மயிலம்:மயிலத்தில் ஆடு வளர்ப்பு பயிற்சி முகாம் நடந்தது.தமிழக அரசின் சார்பில் கிராமங்களில் இலவச ஆடு, மாடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கூட்டேரிப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த ஆடு வளர்க்கும் பயனாளிகள் 62 பேருக்கு பயிற்சி முகாம் நடந்தது.மயிலம் அரசு கால்நடை மருத்துவனையில் நடந்த முகாமிற்கு மருத்துவ அலுவலர் பெரியசாமி தலைமை தாங்கி, முகாமை துவங்கி வைத்தார். கால்நடை அறிவியல் பல்கலைக் கழக உதவிப் பேராசிரியர் கண்ணன், ஆடு வளர்ப்பு குறித்த பயிற்சியளித்தார்.ஆடு பண்ணை அமைக்கும் முறைகள், தீவனம் மற்றும் நோய்களிலிருந்து பாதுகாக்கும் வழிமுறைகள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. பயனாளிகளுக்கு வழிகாட்டி புத்தகம் வழங்கினர்.

### மஞ்சள் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி பகுதியில் சொட்டு நீர் பாசனம் மூலம் மஞ்சள் பயிரிடுவதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.கள்ளக்குறிச்சி பகுதியில் கடந்தாண்டு பருவமழை பொய்த்து போனதால் அணைகள், ஏரிகள், குளங்கள் போன்ற நீர் நிலை பகுதிகள் வறண்டு கிடக்கிறது. இதனால் நிலத்தடி நீர்மட்டமும் நாளுக்கு நாள் குறைந்தது. இதனால் கிணற்று நீர்பாசனத்தை நம்பிய விவசாயிகள் கரும்பு, நெல், மக்காச்சோளம், மஞ்சள், மரவள்ளி போன்றவற்றை பயிரிட்டு வருகின்றனர். கடந்த சில நாட்களாக அவ்வப்போது பெய்து வரும் பலத்த மழையால் பூமி ஈரப்பதமாகியுள்ளது. இந்நிலையில் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தும் வகையில் கிணற்று பாசனத்தில் சொட்டு நீர் பாசனம் அமைத்து, விவசாயிகள் பயிரிடத் துவங்கியுள்ளனர். கள்ளக்குறிச்சி, கச்சிராயபாளையம், சின்னசேலம் உள்ளிட்ட பகுதிகளில் ஆண்டுதோறும் மஞ்சள் பயிர் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஓராண்டு பயிரான மஞ்சளுக்கு தண்ணீர் தேவை. இதனால், நிலத்தடி நீர் மட்டம் குறையாமல் இருப்பதற்கு, சொட்டு நீர் பாசன முறையில் மஞ்சள் சாகுபடி செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

### ஆத்தூரில் மஞ்சள் ஏலம் ரூ.60 லட்சம் வர்த்தகம்

ஆத்தூர்: ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 2,000 மூட்டை மஞ்சள், 60 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்துக்கு, 480 விவசாயிகள்,

தங்கள் விளைவித்த, 2,000 மூட்டை மஞ்சளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 4,819 ரூபாய், அதிகபட்சம், 6,659 ரூபாய், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 4,339 ரூபாய், அதிகபட்சம், 5,220 ரூபாய், பனங்காலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 8,000 ரூபாய், அதிகபட்சம், 10,129 ரூபாய் என விற்பனையானது. ஏலத்தில், 15க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்து கொண்டு, 2,000 மூட்டை மஞ்சளை, 60 லட்சம் ரூபாய்க்கு வாங்கிச் சென்றனர். கடந்த வாரத்தை காட்டிலும், நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், மஞ்சள் விலை குறைந்ததால், விவசாயிகள் கவலையடைந்தனர்.

## நிலக்கடலை பயிரில் சுருள் பூச்சி தாக்குதல்

திருச்செங்கோடு: திருச்செங்கோடு பகுதி விவசாயிகள், நிலக்கடலை பயிரில் சுருள் பூச்சி தாக்குதல் ஏற்படுவதை கட்டுபடுத்த வேண்டும் என, எலச்சிபாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சையத்முகம்மது தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்ட அறிக்கை:

எலச்சிபாளையம் வட்டாரத்தில், 12 ஆயிரத்து, 584 ஏக்கர் பரப்பில் மானாவாரி பயிரான நிலக்கடலை பயிரிடப்பட்டுள்ளது. பூ பூக்கும் பருவத்தில் உள்ள நிலக்கடலை பயிரில், சுருள் பூச்சி தாக்குதல், அதிகமாக உள்ளது. இந்த இளம் புழுக்கள், இலையின் நடுப்பகுதியை உண்பதால், இலைகள் சுருண்டு காணப்படும். பயிர் பாதுகாப்புக்காக, ஊடுபயிராக கம்பு, வரப்பு ஓரத்தில் சோயா பயிரிடலாம். இரவு, 8 மணி முதல், 11 மணி வரை, தலா ஒரு ஏக்கருக்கு, ஐந்து விளக்கு பொறிகள் வைக்க வேண்டும். மேலும், டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் ஒட்டுண்ணிகளை, ஒரு ஏக்கருக்கு இரண்டாயிரம் எண்கள் விடுவதன் மூலம், சுருள் பூச்சியின் தாக்குதல் குறையும். எனவே, நிலக்கடலை விவசாயிகள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாள வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிலக்கடலை விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

கிருஷ்ணகிரி: நிலக்கடலை சந்தையில் நல்ல விலை கிடைத்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிக பரப்பில் நெல் மற்றும் சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இதற்கு அடுத்தபடியாக எண்ணெய் வித்து பயிர்களான நிலக்கடலை,

எள், சூரியகாந்தி ஆகியவை சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக சூளகிரி, கெலமங்கலம், தளி, ஊத்தங்கரை, மத்தூர், பர்கூர், போச்சம்பள்ளி, வேப்பனப்பள்ளி ஆகிய சுற்றுவட்டார பகுதியில் மானாவாரியாக நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மானாவாரியாக வைகாசி பட்டத்தில், 60 ஆயிரம் ஏக்கரில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு வைகாசி பட்ட விதைப்பின் போது மழை சீராக பெய்யாததால் கிணற்று பாசனம் வைத்துள்ள விவசாயிகள் மட்டும் நிலக்கடலை விதைப்பு மேற்கொண்டனர். இதன்படி மாவட்டத்தில், 10 ஆயிரம் ஏக்கரில் மட்டும் வைகாசி பட்டத்தில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டது. இதில், 30 சதவீதம் செடிகள் காய்ந்து விட்ட நிலையில், 70 சதவீதம் மட்டுமே தற்போது அறுவடைக்கு வந்துள்ளது. தற்போது மாவட்டத்தில் நிலக்கடலை அறுவடை செய்து வரும் நிலையில் கிருஷ்ணகிரி பழையபேட்டையில் உள்ள மார்க்கெட்டுக்கு குறைந்த அளவே நிலக்கடலை விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. வரத்து குறைவால் நிலக்கடலையின் விலை அதிகரித்துள்ளது. நேற்று கிருஷ்ணகிரி பழைய பேட்டை மார்க்கெட்டில், 60 கிலோ எடை கொண்ட நிலக்கடலை, ஆயிரத்தி, 900 ரூபாய் முதல், 2,000 ரூபாய் வரை விற்பனையானது. நிலக்கடலையை வாங்க உள்ளூர் வியாபாரிகள் மட்டுமன்றி பொள்ளாச்சி, ஈரோடு, திண்டுக்கல், சேலம் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் அதிக அளவில் கிருஷ்ணகிரி மார்க்கெட்டல் குவிவதால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. வரும் வாரங்களில் நிலக்கடலை வரத்து அதிகம் இருந்தாலும் வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு வாங்க வருவதால் விலை அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. இது குறித்து வேப்பனப்பள்ளியை சேர்ந்த விவசாயி சாக்கப்பன் கூறியது: வேப்பனப்பள்ளி சுற்றுவட்டார பகுதியில் ஆற்று பாசனம் மற்றும் கால்வாய் பாசனம் இல்லாத நிலையில் கிணற்று பாசனத்தை நம்பி நிலக்கடலை விதைப்பு செய்தோம். நிலத்தடி நீர்மட்டம் குறைந்தாலும், இரண்டு நாட்களுக்கு ஒரு முறை நிலக்கடலைக்கு தண்ணீர் பாய்சினோம். பூக்கள் பூக்கும் தருவாயில் எங்கள் பகுதியில் மிதமான மழை பெய்தது நிலக்கடலை சாகுபடிக்கு ஏற்றதாக இருந்தது. இதனால், எதிர்பார்த்தபடி விளைச்சல் இல்லை என்றாலும், ஓரளவுக்கு விளைச்சல் கிடைத்துள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

### வாழை அறுவடை சீஸன் நிறைவு விலை உயர்வால் மகிழ்ச்சி

கோபிசெட்டிபாளையம்: கோபி, சுற்று வட்டாரத்தில் வாழை அறுவடை சீஸன் நிறைவால், நேந்திரம் கிலோ, 50 ரூபாய்க்கும், தேன்வாழை தார், 1,600 ரூபாய்க்கும் விற்கப்படுவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கோபி சுற்று வட்டாரத்தில்,

மூன்று பாசனத்துக்கு உட்பட்ட வேட்டைக்காரன் கோவில், பங்களாபுதூர், கள்ளிபட்டி, டி.என்.,பாளையம், கோபி, கொளப்பலூர், கூகலூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், 15,000 ஏக்கரில், கதளி, நேந்திரம், ரோபஸ்டரா, ரஸ்தாளி, மொந்தன், பச்சை வாழை, பூவன், தேன் வாழை ஆகிய ரக வாழை பயிரிடப்பட்டுள்ளன. கடந்த இரு ஆண்டாக, பருவமழை பொய்த்ததன் காரணமாக, வாழை சாகுபடி பரப்பளவு குறைவாக உள்ளது. அனைத்து பகுதியில் வாழை அறுவடை சீஸன் நிறைவடைந்து உள்ளது. கோபி வேளாண்மை விற்பனை சங்கத்துக்கு, 3,000 வாழைத்தார் மட்டுமே வரத்தாகிறது. வாழை வரத்து குறைந்த நிலையில், விற்பனை அதிகரித்ததால் விலை உயர்ந்துள்ளது. தற்போதைய நிலவரப்படி கதளி ஒரு கிலோ, 41 ரூபாய் முதல், 45 ரூபாய் வரையும், நேந்திரம் ஒரு கிலோ, 50 ரூபாய்க்கும், தேன்வாழை ஒரு தார், 1,600 செவ்வாழை, 750 ரூபாய், பூவன், 400 ரூபாய், ரஸ்தாளி, 600 ரூபாய், ரொபஸ்டிரா, 400 ரூபாய், மொந்தன், 500 ரூபாய், பச்சை நாடன், 310 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: கடந்த ஆண்டு, வாழை அறுவடை சீஸனில் கதளி, 15 ரூபாய், ரஸ்தாளி, 20 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. வாழை விலையும் வீழ்ச்சி அடைந்ததால், விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். வாழையை பொருத்தவரை, ஓராண்டு பயிரிட்டால், இரண்டு ஆண்டு அல்லது, மூன்று ஆண்டு வரை வாழை குலை அறுவடை செய்யலாம். முதலில் வரும் குலை நன்றாக இருக்கும். அடுத்த ஆண்டு பக்கவாட்டு கன்றுகள் மூலம், குலை வரும் என்பதால் தார் பிடிப்பு குறைவாக காணப்படும். நடப்பாண்டு வாழையில் இலை கருகல் நோய் பாதிப்பு ஏற்பட்டதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். வாழை அறுவடை சீஸன் நிறைவடைந்த நிலையில், வாழை விலை பன்மடங்கு உயர்ந்துள்ளது. கதளி ஒரு கிலோ, 42 ரூபாய், நேந்திரம் ஒரு கிலோ, 50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.ஆயுதபூஜை, தீபாவளி பண்டிகை நெருங்குவதால், வாழையின் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது, என்றனர்.

## நெற்பயிரில் பரவும் இலைக்கீரல் நோய் கட்டுப்படுத்த யோசனை

கோபிசெட்டிபாளையம்: டி.என்.பாளையம் பகுதியில் நெற்பயிரில், பாக்டீரியா இலைக்கீரல் நோய் தாக்கத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். நோய் கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து, டி.என்.பாளையம் வேளாண்மை துறையினர் விளக்கம் அளித்துள்ளனர்.அரக்கன்கோட்டை பாசனப்பகுதிகளான, பங்களாப்புதூர், கள்ளிப்பட்டி, டி.என்.பாளையம், டி.ஜி.புதூர் உள்ளிட்ட பகுதியில், 2,200 எக்டேர் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளன. நெற்பயிர்களில் கதிர் பிடிக்க துவங்கி உள்ளன.

பாக்டீரியா இலைக்கீரல் நோய் தாக்கத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். நோயை கட்டுப்படுத்தும் விதம் குறித்து, டி.என்.பாளையம் வேளாண்மை உதவி இயக்குனர் சிதம்பரம் கூறியதாவது: நெற்பயிர்களின் இலைகளின் நுனி மற்றும் ஓரங்களில் ஆரஞ்சு நிற கீரல்கள் நீளவாக்கில் காணப்படும். நாளடைவியில், இக்கீரல்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து வைக்கோல் போன்று காய்ந்து காணப்படும். வயல்களில் காணப்படும் அதிகமான களைகள், காற்றில் அதிகமான ஈரப்பதம் நிலவும் சூழ்நிலை, மழைத்துளி, வேகமாக வீசும் காற்று ஆகியவை, இந்நோய் வேகமாக பரவுவதற்கான சூழல்களாகும். நோய்க்கு எதிர்ப்புதிறன் உள்ள ரகங்களை பயிரிடுதல் (ஐ.ஆர்.20, பொன்னி) நோய் தாக்காத விதைகளை விதைத்தல், நடவின்போது நாற்றின் நுனிகளை கிள்ளி நடுவதை தவிர்த்தல், அதிகமான தழைச்சத்து உரம் இடுவதை தவிர்த்தல், களையை அகற்றி வயலை சுத்தமாக வைத்துக்கொள்வது, நோய் தாக்கிய வயலில் இருந்து மற்ற வயல்களுக்கு பாசன நீர் செல்லாமல் தவிர்த்தல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் இந்நோயின் தாக்கத்தை குறைக்கலாம். நோயின் தாக்கம் அதிகமாகும்போது, காப்பர் ஹைட்ராக்ஸைடு மருந்தை, ஏக்கருக்கு, 250 கிராம் என்ற அளவில், இலைகளின் மேல் தெளித்தோ அல்லது காப்பர் ஆக்ஸி குளோரைடு, 500 கிராம் மற்றும் ஸ்டெப்ரோசைக்ளின், 120 கிராம் ஆகிய மருந்துகளை கலந்து பயிரின் மேல் தெளிப்பதன் மூலம், இந்நோயை கட்டுப்படுத்தலாம். நாற்றாங்கால் விடும்போது, விதைகளை ஸ்டெப்ரோசைக்ளின், மூன்று கிராம் என்ற அளவில், எட்டு மணி நேரம் விதைகளை ஊறவைத்தும் விதை நேர்த்தி செய்து விதைக்கலாம். ஐந்து சதம் வேப்பங்கொட்டை கரைசல் தெளித்தும், இந்நோயினை கட்டுப்படுத்தலாம். நோயின் அறிகுறிகள் தென்பட்டவுடன், புதிய பசுஞ்சாணத்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு, 20 கிராம் என்ற அளவில் கரைத்து வடிகட்டி, 15 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளித்தால், இந்நோயை கட்டுப்படுத்தலாம், என்றார்.

### முருங்கை விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி

வெள்ளகோவில்: வெள்ளகோவிலில் ஞாயிற்று கிழமைகளில் நடக்கும் வாரச்சந்தைகளில் அதிக அளவில் வியாபாரிகளும், மக்களும் வந்து செல்வார்கள். நேற்று நடந்த வாரச்சந்தையில், தேங்காய் விலை கடுமையாக உயர்ந்தது. கடந்த வாரத்தைவிட, தேங்காய் பருப்பின் விலை, ஒரு கிலோ ஒன்று, 65 முதல், 67 ரூபாய் வரை உயர்ந்து விற்பனையானது. தேங்காய் வரத்து குறைந்ததால், ஐந்து முதல், ஏழு ரூபாய் வரை உயர்ந்தது. தேங்காய் ஒன்று, 10 முதல், 15 ரூபாய் வரை விற்பனையானது. சிறிய தேங்காய் ஒன்று, 7 முதல், 8 ரூபாய் வரை விற்பனையானது. மர முருங்கை நேற்று

காலை, 25 காய் கொண்ட ஒரு கட்டின் விலை, 40 முதல், 50 ரூபாய் வரை விற்றது. 600 காய் கொண்ட ஒரு சாக்கு முருங்கை, 1,000 ரூபாய்க்கும், செடி முருங்கை ஒரு சாக்கு, 1,250 ரூபாய்க்கும் விற்றது. இதனால் முருங்கை விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

## நெல் நடவு பணியில் புதுநுட்பம் பயன்படுத்தும் தேனி விவசாயிகள்

தேனி : நெல் விளைச்சலை அதிகரிக்க "லேசர் லெவலர்' என்ற, புதிய எந்திரத்தினை பயன்படுத்தி விவசாயிகள், நிலத்தை சமப்படுத்தி வருகின்றனர். விவசாயத்துறையில் தற்போது, திருந்திய நெல் சாகுபடி, வரிசை நடவு போன்ற புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தப்படுகின்றன. இதனால் ஒரு எக்டேருக்கு சாகுபடி 10.50 டன்னாக உள்ளது.மேலும், விளைச்சலை அதிகரிக்க, தற்போது "லேசர் லெவலர்' என்ற எந்திரம் பயன்படுத்தப்படுகிறது. நிலத்தை, புழுதி உழவு செய்து மேல் மண் முழுக்க பவுடராக்கிய பின்னர்,"லேசர் லெவலர்' எந்திரம் மூலம் சமப்படுத்த வேண்டும். இதன் மூலம் நெல் வயல் முழுக்க ஒரே அளவாக தண்ணீர் நிற்கும். பழைய முறையில்,சில இடங்களில் தண்ணீர் தேங்காது, சில இடங்களில் தேங்கும். தண்ணீர் நிற்காத பகுதியில், விளைச்சல் குறைவாக இருக்கும். தண்ணீர் அதிகம் தேங்கியிருக்கும் இடத்தில் அழுகல் நோய் ஏற்பட்டு சாகுபடி பாதிக்கப்படும். ஆனால் "லேசர் லெவலர்' தொழில் நுட்பத்தில், சீரான மட்டத்தில் வயல் முழுக்க தண்ணீர் நிற்பதால், விளைச்சல் 10 சதவீதம் அதிகமாக இருக்கும். தண்ணீர் 30 சதவீதம் சேமிக்கப்படும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், இந்த நுட்பம் அறிமுகம் செய்யப்பட்ட போது, சில விவசாயிகள் மட்டும் பயன்படுத்தினர். தற்போது பெரும்பாலான விவசாயிகள் பயன்படுத்த தொடங்கி உள்ளனர். மேலும் இது குறித்து, விழிப்புணர்வு பிரசாரம் செய்து வருகிறோம், என விவசாய பொறியியல் துறையினர் தெரிவித்தனர்.

## திருந்திய நெல் சாகுபடி விவசாயத்துறை விளக்கம்

தேனி : திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயத்துறை விளக்கம் அளித்துள்ளது. திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் உயர் விளைச்சல் தரும் வீரிய ஒட்டு நெல் ரகங்களை பயன்படுத்த வேண்டும்.ஒரு ஏக்கருக்கு நடவு செய்ய 2 கிலோ விதை, ஒரு சென்ட் நாற்றங்கால் தேவை. நாற்றாங்காலில் பாலித்தீன் விரிப்புகளை விரித்து சுற்றிலும் மரச்சட்டங்களை வைத்து உள்ளே மேட்டுப்பாத்திகள் அமைத்து,மண் மற்றும் தொழு உரம்

நிரப்பி விதைக்க வேண்டும்.10 முதல் 14 நாள் நாற்றுக்களை நடவு செய்ய வேண்டும். நடவு வயல் துல்லியமாக சமன் செய்யப்பட வேண்டும். இடைவெளிக்கு மார்க்கர் கருவியை பயன்படுத்த வேண்டும். 22.5 செ.மீ., இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். ஒரு குத்துக்கு ஒரு நாற்று வீதம் நடவு செய்ய வேண்டும். நீர் மறைய நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். 2.5 செ.மீ.,க்கு அதிகமாக நீர் பாய்ச்சக்கூடாது. களையெடுக்கும் கருவி மூலம் மட்டுமே களையெடுக்க வேண்டும். 10 நாளுக்கு ஒருமுறை வீதம் மொத்தம் நான்கு முறை களையெடுக்க வேண்டும். வண்ண அட்டையை பயன்படுத்தி தேவைக்கு ஏற்ப தழைச்சத்து மேல் உரமாக இட வேண்டும்.இவ்வாறு விவசாயத்துறை விளக்கம் அளித்துள்ளது.

### மாவட்டத்தில் வருமானமின்றி தென்னை விவசாயிகள் மரங்கள் வெட்டப்படுவதால் தேங்காய் விலை உயர்வு

ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டத்தில் பராமரிக்க முடியாததால், பெரும்பாலான தென்னந்தோப்புகளை விவசாயிகள் அழித்து வருவதால், தேங்காய் விலை உயர்ந்து வருகிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில் 25 ஆயிரம் ஏக்கரில் தென்னை விவசாயம் நடந்தது. குறிப்பாக, உச்சிப்புளி, ரெகுநாதபுரம், பெரிய பட்டிணம், திருப்புல்லாணி, கீழக்கரை, பாம்பன், மண்டபம் உள்ளிட்ட பகுதிகளில் பல ஏக்கர் பரப்பளவில் விவசாயம் நடக்கிறது. ஆண்டுதோறும் "சீசன்' காலங்களில் இங்கிருந்து மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர் போன்ற பிற மாவட்டங்களுக்கு தேங்காய்கள் "டன்' கணக்கில் அனுப்பப்பட்டன. தென்னை விவசாயிகளும் இதன் மூலம் அதிகம் லாபம் ஈட்டினர். தென்னை மரங்கள் அழிப்பு: கடந்தாண்டு பருவமழை பொய்ப்பால், பெரும்பாலான விவசாயிகள் தோப்புகளை பராமரிக்க முடியாமலும், வேலையாட்களுக்கு கூலி கொடுக்க முடியாமலும் மரங்களை அவ்வப்போது அழித்து வரும் பரிதாபம் நீடிக்கிறது. இதன் விளைவாக, தற்போது 10 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே தென்னை விவசாயம் நடந்து வருகிறது. தண்ணீர் பற்றாக்குறையால், பூச்சி வெட்டு ஏற்பட்டு, தேங்காய் வளர்ச்சி இன்றி சுறுங்கி காணப்படுகிறது. இதனால், எதிர்பார்த்த அளவுக்கு காய் விற்கமுடியாமல், விவசாயிகள் குறைந்த விலைக்கு விற்கப்படும் பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். தேங்காய் கிடைக்காததால் கடந்த வாரம் 10க்கு விற்ற நல்ல தேங்காய் ஒன்று 15 ரூபாய்க்கு விற்கிறது. விளைச்சல் குறைவால், இன்னும் உயரும் என்ற அபாயம் ஏற்பட்டுள்ளது. தென்னை விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர், செல்லத்துரை அப்துல்லா கூறியதாவது: ஏக்கருக்கு 60 மரங்கள் இருக்கும். ஒரு மரத்தில்

இருந்து 45 நாட்களுக்கு ஒரு முறை 80 முதல் 90 காய்கள் வரை விளைச்சல் காணப்படும். தண்ணீர் செழிப்பாக இருந்ததால், தென்னம் பாளையும் பூத்து குலுங்கும். அந்தளவிற்கு விளைச்சல் இருக்கும். உள்ளூர் விற்பனை தவிர, பிற மாவட்டங்களுக்கு "டன்' கணக்கில் தேங்காய்கள் அனுப்பி வைக்கப்படும். தற்போது, இதன் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. மழை பொய்ப்பால் விவசாயிகள் பெரிதும் நஷ்டமடைந்துவிட்டனர். பராமரிக்க முடியாமல், தென்னந்தோப்புகளை அழித்து வருகின்றனர். வசதி படைத்த ஒரு சிலர் மட்டுமே, கிணற்று நீரை கொண்டு இத்தொழிலை செய்து வருகின்றனர், என்றார்.

### விதை நெல் வழங்கல்

முதுகுளத்தூர்: முதுகுளத்தூர் அருகே கீழக்காஞ்சிரங்குளம் விவசாயிகளுக்கு, இலவசமாக விவசாய பொருட்கள் வழங்கும் விழா, ஊராட்சி தலைவர் சங்கரவேல் தலைமையில் நடந்தது. விதை நெல் மூடை, சூப்பர் பாஸ்பேட் அடி உரங்கள் வழங்கபட்டது. பேராசிரியர் சக்திவேல், உதவி பேராசிரியர்கள் யோகலட்சுமி, ஜெயசீனிவாசன், பரமக்குடி விவசாய ஆராய்ச்சி பல்கலை ஒருங்கிணைப்பாளர் அருணாதேவி உட்பட பலர் பங்கேற்றனர்.

### புரட்டாசி பட்டத்தில் பருத்தி பயிரிட வேண்டுகோள்

விருதுநகர் : ""புரட்டாசி பட்டத்தில் பருத்தி பயிரிட்டால் கூடுதல் விலை கிடைக்கும்,"என, வேளாண் வணிக துணை இயக்குநர் முத்துமுனியாண்டி தெரிவித்துள்ளார். அவரது அறிக்கை:பருத்தி அதிகளவில் நுகரும் தமிழ்நாடு 2012-2103ல் 5 லட்சம் பொதிகள் பருத்தியை உற்பத்தி செய்தது. தமிழகத்தில் மாசி மற்றும் புரட்டாசி பட்டத்தில் பருத்தி பயிரிடப்படுகிறது. தற்போது, மாசியில் பரியிடப்பட்ட பருத்தி, விவசாயிகளால் இருப்பு வைத்து விற்பனைக்கு வந்துகொண்டுள்ளது. மேலும், மற்ற மாநிலங்களில் இருந்து மிகக்குறைந்த அளவில் வரத்துள்ளது. தற்போது பருத்தி குவிண்டாலுக்கு 4,800 ரூபாய் முதல் 5,200 ரூபாய் வரை விற்பனையாகிறது. வரும் மாதங்களில் பருத்திக்கான தேவை நிலையாக இருந்தாலும், எதிர்பார்க்கப்படும் குறைந்த வரத்து விலையை உயரச் செய்யும். மேலும், கரீப் பருவ அறுவடை சமயமான அக்டோர் முதல் டிசம்பர் 2013ல், அனைத்து முக்கிய பருத்தி பயிரிடும் மாநிலங்களில் இருந்து எதிர்பார்க்கப்படும்

அதிகவரத்து பருத்தி விலையை நிலைப்படுத்தும். தமிழ்நாடு வேளாண் பல்கலையில் இயங்கிவரும், உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையத்தின் ஆய்வு முடிவு ஆகஸ்ட் - செப்டம்பர் 2013ல் பருத்தி விலை, குவிண்டாலுக்கு 5,000 ரூபாய் முதல் 5,500 ரூபாய் வரை இருக்குமென உறுதி செய்கின்றன. எனவே, விவசாயிகள் முன்னறிவிப்பு விலையின் அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்கலாம். மாவட்டத்தில் பருத்தி விதைப்பதற்கு உகந்தது ஆவணி முதல் புரட்டாசி பட்டமாகும். எனவே, விவசாயிகள் இப்பட்டத்தில் பருத்தி சாகுபடி செய்தால் வரும் ஜனவரி, பிப்ரவரியில் குவிண்டாலுக்கு 4,800 ரூபாய் முதல் 5,100 ரூபாய்வரை விலை பெறலாம் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, பருத்திக்கு கூடுதல் விலைகிடைக்க வாய்ப்புள்ளதால், விருதுநகர் மாவட்ட விவசாயிகள் இப்பட்டத்தில் பருத்தியை சாகுபடி செய்து பயனடைய வேண்டும். இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.

### தரமான விதைகளை கொள்முதல் செய்யவேண்டும்

தூத்துக்குடி : விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்ட விதை விற்பனையாளர்கள் முளைப்புத் திறன் பாதிக்காமலிருக்க தரமான விதைகளை விற்பனையாளர்கள் கொள்முதல் செய்யவேண்டுமென விருதுநகர் விதை ஆய்வு துணை இயக்குநர் நாராயணப்பிரசாத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது,தற்போது பருவகாலம் துவங்க உள்ள நிலையில் விதைகளை கொள்முதல் செய்யும் போது இன்வாய்ஸ்களில் விதைகளின் குவியல் எண் குறிப்பிட்டுப் பெற வேண்டும். குறிப்பாக மக்காச்சோள விதைகளை அதிகமான அளவு விற்பனை செய்யவேண்டும் என்ற நோக்கோடு விவசாயிகளின் இல்லங்களில் வைத்து விற்பனை செய்யக் கூடாது. விதை உரிமம் பெற்ற இடங்களில் மட்டுமே விதைகளை இருப்பு வைத்து விற்பனை செய்ய வேண்டும். மீறி செயல்பட்டால் மீறுபவர்கள் மீது விதைகள் சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், கொள்முதல் செய்கின்ற விதைகளுக்கு முளைப்புத்திறன் அறிக்கையினை சம்பந்தப்பட்ட நிறுவனங் களிடம் கேட்டு பெறவேண்டும். இல்லையெனில் பணி விதை மாதிரிகள் எடுத்து முடிவுகளை அறிந்து கொள்ள வேண்டும். திருப்திகரமாக இருந்தால் மட்டுமே விவசாயிகளுக்கு விதைகளை விற்பனை செய்யவேண்டும். நல்ல தரமான நிறுவனங்களில் தரமான விதைகளை மட்டுமே கொள்முதல் செய்ய வேண்டும். தரத்தில் சிறிது சந்தேகம் ஏற்பட்டாலும் அவ்விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்யவேண்டாம். விதைகளை விற்பனை செய்கின்ற தொழிலில் ஈடுபட்டுள்ள விதை விற்பனையாளர்கள் தரமான விதைகளை விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### காய்கறிக்கு விலை இருக்கு..விளைச்சல் இல்லை!

புதியம்புத்தூர் : புதியம்புத்தூர் காய்கறி கமிஷன் மண்டிகளில் காய்கறி மற்றும் வாழைத்தார், வாழை இலை வரத்து வெகுவாக குறைந்துள்ளது. புதியம்புத்தூரை சுற்றியுள்ள 20 கிராமங்களிலிருந்து காய்கறிகளை விவசாயிகள் புதியம்புத்தூர் கமிஷன் மண்டிக்கு கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். தினசரி 20 டன்களுக்கு குறையாமல் காய்கறி விற்பனைக்கு வரும். தற்சமயம் மழை பெய்யாததால் நிலத்தடி நீர் குறைந்து கிணறுகளில் நீர் இல்லாததால் விவசாயம் செய்யவில்லை. கிணறு மற்றும் போர்வெல்களில் நீர் உள்ள ஒருசில விவசாயிகள் மட்டும் சிறிய அளவில் விவசாயம் செய்து அந்த விவசாய பொருள்கள் மட்டுமே விற்பனைக்கு வருகின்றன. வெண்டைக்காய், கத்திரி, வெங்காயம் போன்ற பொருள்கள் வருகின்றன. காய்கறிகள் குறைவாக வருவதால் நல்ல ரேட்டிற்கு ஏலம் போகிறது. ஆனால் அதிக அளவு உற்பத்தி செய்ய முடியவில்லை என்று விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர். அடுத்த மாதம் மழை பெய்தால் காய்கறி உற்பத்தி பெருகி விலை குறைய வாய்ப்பு உள்ளதாக கமிஷன் கடை உரிமையாளர் தெரிவித்தார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

### சித்தேரியில் கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி போடும் முகாம் கலெக்டர் தொடங்கி வைத்தார்



வேலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட சித்தேரியில் தமிழக அரசின் கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் பசு மற்றும் எருமை இனங்களுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும்

மருத்துவ முகாமை கலெக்டர் சங்கர் தொடங்கி வைத்தார். தொடர்ந்து 21 நாட்கள் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்கள் மற்றும் குக்கிராமங்களில் உள்ள கால்நடைகளை கண்டறிந்து முழு அளவில் 5 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணி நடைபெறும்.

அனைத்து கால்நடை வளர்ப்போர்கள், தங்களது கால்நடைகளுக்கு உரிய காலத்தில் கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி மேற்கொண்டு கால்நடைகளை காப்பாற்றி கிராம பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு ஒத்துழைப்பு அளிக்குமாறு கலெக்டர் சங்கர் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் கமலநாதன், உதவி இயக்குனர் இளங்கோவன், 4–வது மண்டல தலைவர் அய்யப்பன், டாக்டர் ரகு, முருகன் ஆய்வாளர்கள் மற்றும் உதவியாளர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழகம் முழுவதும் நாளை பட்டு வளர்ச்சித்துறை அலுவலர்கள் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு மாநில செயற்குழுவில் தீர்மானம்




தமிழ்நாடு பட்டு வளர்ச்சித்துறை அலுவலர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் மாநில தலைவர் சிவபிரகாசம் தலைமையில் சேலத்தில் நேற்று நடந்தது. மாநில துணைத்தலைவர் நடராஜன், பொருளாளர் ஜெயராமன், பொதுச்செயலாளர் கோவிந்தசாமி உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

பட்டுவளர்ச்சித்துறையில் பணிபுரியும் இளநிலை பட்டு ஆய்வாளர்களுக்கு ரூ. 2 ஆயிரத்தில் இருந்து ரூ. 2 ஆயிரத்து 400 ஆக தர ஊதியம் உயர்த்தி வழங்க வேண்டும்

எனவும், இளநிலை பட்டு ஆய்வாளர்கள் பணியில் சேர்ந்த நாள்முதல் கணக்கிட்டு தேர்வுநிலை, சிறப்பு நிலை வழங்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை துறை நிர்வாகம் மேல்முறையீடு செய்துள்ளதை வாபஸ் பெற்று தீர்ப்பை அமல்படுத்த வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி நாளை (திங்கட்கிழமை) மாலை 5.45 மணியளவில் தமிழகம் முழுவதும் பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும், அதைத்தொடர்ந்து அக்டோபர் 8–ந் தேதி ஊழியர்கள் அனைவரும் முதல்–அமைச்சர், நிதித்துறை செயலாளர், பட்டுவளர்ச்சித்துறை இயக்குனர் ஆகியோருக்கு அஞ்சல் அட்டை அனுப்பும் போராட்டத்தையும், 22–ந் தேதி மாநில, வட்டக்கிளை நிர்வாகிகள் சென்னையில் உண்ணாவிரத போராட்டத்தையும், 25–ந் தேதி அனைத்து ஊழியர்கள் பங்கேற்கும் சென்னையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 5 காசுகள் உயர்வு 320 காசுகளாக நிர்ணயம்



நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 315 காசுகளாக நீடித்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டையின் கொள்முதல் விலையை 5 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 320 காசுகளாக உயர்ந்து உள்ளது.

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– சென்னை–318, ஐதராபாத்–308, விஜயவாடா, தனுகு–317, பார்வாலா–308, மும்பை–340, மைசூர்–315, பெங்களூர்–320, கொல்கத்தா–352, டெல்லி–319.

கறிக்கோழி கிலோ ரூ.61–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.6 குறைக்க முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.55 ஆக சரிவடைந்து உள்ளது. முட்டைக்கோழி கிலோ ரூ.58–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

## புரட்டாசி மாத சனிக்கிழமையையொட்டி தர்மபுரி உழவர் சந்தையில் 52 டன் காய்கறிகள் விற்பனை

புரட்டாசி மாத சனிக்கிழமையையொட்டி தர்மபுரி உழவர் சந்தையில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் குவிந்தனர். நேற்று ஒரே நாளில் 52 டன் காய்கறிகள் ரூ.12½ லட்சத்திற்கு விற்பனையானது.

புரட்டாசி சனி

தர்மபுரி உழவர் சந்தை மாவட்டத்திலேயே பெரிய சந்தையாகும். இங்கு தினமும் 50–க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்களது விளைப்பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர். தினசரி 25 டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பண்டிக்கை நாட்கள் மற்றும் வார விடுமுறையான ஞாயிற்றுக்கிழமைகளில் 30 டன் காய்கறிகள் விற்பனை செய்யப்படுகிறது. வெளிச்சந்தையை விட காய்கறிகள் விலை குறைவு என்பதால் ஏராளமான பொதுமக்கள் உழவர் சந்தையில் காய்கறிகளை வாங்கி செல்கின்றனர்.

இந்தநிலையில் நேற்று புரட்டாசி மாத 2–வது சனிக்கிழமை என்பதால் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் அதிகாலை முதலே உழவர் சந்தைக்கு வரத்தொடங்கினர். நேற்று ஒரே நாளில் மட்டும் 52 டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு உள்ளது. இதில் கேரட், பீட்ரூட், பீன்ஸ் உள்ளிட்ட காய்கறிகள் மட்டும் 6 டன் விற்பனை செய்யப்பட்டு உள்ளது. மொத்தம் 129 விவசாயிகள் நேற்று தங்களது விளைப்பொருட்களை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

ரூ.1½ லட்சத்திற்கு விற்பனை

வழக்கத்துக்கும் மாறாக நேற்று அவரைக்காய், பூசணி, வாழை பழம், வாழை இலை ஆகியவற்றின் விற்பனை அதிகரித்தது. கடந்த வாரம் புரட்டாசி முதல் சனிக்கிழமை அன்று வழக்கமான 30 டன் காய்கறிகள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டது. ஆனால் இந்த வாரம் கூடுதலாக காய்கறிகள் விற்பனையானது. நேற்று ஒரே நாளில் மட்டும் தர்மபுரி உழவர் சந்தையில் ரூ.12½ லட்சத்திற்கு காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டது.

தர்மபுரி உழவர் சந்தை துணை வேளாண் அலுவலர் தேவராஜ், உதவி வேளாண் அலுவலர்கள் பழனி, ரங்கநாதன் ஆகியோர் கூறுகையில், வழக்கத்துக்கு மாறாக நேற்று ஒரே நாளில் 52 டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் வசதிக்காக அதிகாலை முதலே உழவர் சந்தையில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருந்தது. அடுத்த வாரம் புரட்டாசி நடு சனிக்கிழமையையொட்டி காய்கறிகள் கூடுதலாக விற்பனையாகும் என்பதால் அதற்கேற்றார் போல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் கூறினர்.

### தக்காளி விலை கிடுகிடு உயர்வு



திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டுக்கு திருப்பூர், தாராபுரம், பல்லடம், காங்கயம், பொங்கலூர் சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து தக்காளி விற்பனைக்கு வருகிறது. தற்போது தக்காளி உற்பத்தி குறைந்து உள்ளதால் வெளியூர் மற்றும் வெளிமாநில தக்காளி விற்பனைக்கு வந்துள்ளது. இதனால் 12 கிலோ எடை கொண்ட ஒரு பெட்டி தக்காளி ரூ.200 ஆக உயர்ந்து உள்ளது. இதனால் ஒரு கிலோ தக்காளியின் மொத்த

விலை ரூ.17 ஆகவும், கடைகளில் ஒரு கிலோ ரூ.20-க்கும் சில்லறை விற்பனை செய்யப்பட்டது.

இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, அக்டோபர், நவம்பர் மாதங்களில் தான் 3-வது பருவத்துக்கான தக்காளி செடிகள் நடப்படும். தற்போது 2-ம் பருவ உற்பத்தி முடிவடையும் நிலையில் இருப்பதால் தக்காளி உற்பத்தி குறைந்து விட்டது. இதனால் விலை அதிமாகி விட்டது. டிசம்பர், ஜனவரி மாதங்களில் மீண்டும் தக்காளி உற்பத்தி அதிகரிக்கும். அப்போது விலையும் குறையும் என்றனர்.

## தாராபுரம் தினசரி மார்க்கெட்டில் விவசாயிகள் விளை பொருட்களை விற்பனை செய்ய இடவசதி ஆர்.டி.ஓ. தகவல்



தாராபுரம் தினசரி மார்க்கெட்டில் விவசாயிகள் விளை பொருட்களை கொண்டு வந்து விற்பனை செய்ய இடவசதி செய்து தரப்படும் என்று முத்தரப்பு பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டு உள்ளதாக ஆர்.டி.ஓ. கூறினார்.

<u>காய்கறி மார்க்கெட்</u>

தாராபுரம் பழைய சர்ச் ரோட்டில் நகராட்சிக்கு சொந்தமான காய்கறி மார்க்கெட் உள்ளது. தாராபுரம் மற்றும் அதை சுற்றி உள்ள கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் தங்களது தோட்டங்களில் விளைந்த விளை பொருட்கள் மற்றும் காய்கறிகளை கொண்டு வந்து காய்கறி மார்க்கெட்டில் விற்பனை செய்து வந்தனர்.

ஆனால் சமீபகாலமாக விவசாயிகள் கொண்டு வரும் விளைபொருட்களை மார்க்கெட்டில் வைத்து விற்பனை செய்ய இடவசதி இல்லை என்றும், அந்த இடத்தை குத்தகைதாரர் தினசரி வாடகைக்கு விட்டு விட்டதாகவும், இதனால் ரோட்டின் மீது கூடை மற்றும் காய்கறி மூடைகளை வைத்து விற்பனை செய்து வருவதாகவும், மேலும் இடைத்தரகர்கள்

தொல்லை தாங்கமுடியவில்லை என்றும், காய்கறி மூடைகளை கொண்டு வரும் முன்பே பிடுங்கி சென்று விடுவதாகவும் எனவே ஏற்கனவே இருந்த இடத்தை விவசாயிகளுக்கு ஒதுக்கி தரவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

<u>பேச்சுவார்த்தை</u>

இந்த பிரச்சினைக்கு தீர்வு காணும் விதமாக ஆர்.டி.ஒ. அலுவலகத்தில் முத்தரப்பு பேச்சுவார்த்தை நேற்று நடைபெற்றது. இதற்கு ஆர்.டி.ஒ. திவாகர் தலைமை தாங்கினார். நகராட்சி ஆணையாளர் சரவணக்குமார் முன்னிலை வகித்தார். இதில் விவசாயிகள் காளிமுத்து, ஈஸ்வரமூர்த்தி, பழனிச்சாமி, வேளாண் துறை உதவி இயக்குனர் வெங்கடாச்சலம், உழவர் சந்தை அலுவலர் வெங்கடேஷ் மற்றும் ஒப்பந்ததாரர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் பேசியதாவது:–

நகராட்சிக்கு சொந்தமான தினசரி காய்கறி மார்க்கெட்டில் விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை குத்தகைதாரர் ஆக்கிரமிப்பு செய்து வாடகைக்கு விட்டு தினமும் வாடகை வசூல் செய்கிறார். இதனால் எங்களுக்கு காய்கறி மூடைகளை வைப்பதற்கு இடம் இல்லை. எனவே ஏற்கனவே இருந்த இடத்தை ஒதுக்கி தரவேண்டும். காய்கறி மூடைகளுக்கு ரசீது கொடுப்பது இல்லை.

ஒப்பந்ததாரர்:– ஏற்கனவே இருந்த காலி இடத்தில் கழிவறை கட்டப்பட்டுள்ளது. நாங்கள் அதை ஆக்கிரமிக்கவில்லை. சுங்கம் வசூல் செய்யும் தொகையை வெள்ளைதாளில் எழுதி கொடுக்கிறோம்.

ஆணையாளர் சரவணக்குமார்:– மார்க்கெட்டின் வடக்குப்பகுதியில் காலியாக உள்ள இடத்தை விவசாயிகளுக்கு ஒதுக்கித்தருகிறோம். மேலும் ஒப்பந்ததாரர் முறையாக ரசீது கொடுக்க வேண்டும்.

<u>இடம் ஒதுக்கப்படும்</u>

ஆர்.டி.ஓ. திவாகர்:– காலி இடத்தை நேரில் ஆய்வு செய்து அதன்பின்னர் முடிவு செய்யலாம்.

இதையடுத்து ஆர்.டி.ஓ. மற்றும் ஆணையாளர் கோரிக்கையை விவசாயிகள் ஏற்றுக்கொண்டனர். இதையடுத்து இந்த பிரச்சினை முடிவுக்கு வந்தது.

அதன்பின்னர் காய்கறி மார்க்கெட்டில் விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட உள்ள இடத்தை ஆர்.டி.ஓ. திவாகர், ஆணையாளர் சரவணக்குமார் மற்றும் தாசில்தார் சிவசுப்பிரமணியன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இது குறித்து குறித்து ஆர்.டி.ஓ. கூறும் போது:– காய்கறி மார்க்கெட்டில் காலியாக உள்ள இடம் விவசாயிகளுக்கு ஒதுக்கப்படும் என்றார்.

## கடந்த வாரத்தை காட்டிலும் கொப்பரை தேங்காய் கிலோவுக்கு 7 ரூபாய் அதிகரிப்பு

## விவசாயிகள் மகிழ்ச்சி



முத்தூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த வாரத்தை காட்டிலும் கொப்பரை தேங்காய் கிலோவுக்கு 7 ரூபாய் அதிகரித்து ஏலம் போனது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

தேங்காய் ஏலம்

திருப்பூர் மாவட்டம், முத்தூர் ஒழுங்குமுறை விற்பனைகூடத்தில் வாரந்தோறும் சனிக்கிழமை சுற்றுவட்டார விவசாயிகளின் தேங்காய், கொப்பரை தேங்காய், எள் ஆகிய வேளாண் விளைபொருட்கள் ஏலம் நடைபெற்று வருகிறது.

இதன்படி நேற்று நடைபெற்ற ஏலத்தில் சுற்றுவட்டார விவசாயிகள் 9 ஆயிரத்து 524 தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். ஒரு கிலோ தேங்காய் அதிகபட்சமாக ரூ.21.20–க்கும், குறைந்த பட்சமாக 16.96 ரூபாய்க்கும் ஏலம் போனது.

விவசாயிகள் மகிழ்ச்சி

கொப்பரை தேங்காய் 69 மூட்டைகள் ஏலத்திற்கு வந்திருந்தன. ஒரு கிலோ கொப்பரை தேங்காய் அதிகபட்சமாக 65.10 ரூபாய்க்கும், குறைந்த பட்சமாக ஒரு கிலோ 40.75 ரூபாய்க்கும் விற்பனை ஆனது.

கடந்த வாரம் ஒரு கிலோ தேங்காய் அதிக பட்சமாக ரூ.19.30–க்கு விற்கப்பட்டது. இந்த வாரம் ஒரு கிலோ ரூ.21.20–க்கு விற்கப்பட்டதால் தேங்காய் கொண்டு வந்திருந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். அதே போல் கொப்பரை தேங்காய் கடந்த வாரத்தை விட கிலோ ரூ.7 அதிகரித்து விற்கப்பட்டது.

இந்த ஏலத்தில் கரூர், காங்கயம், சிவகிரி, அவல்பூந்தொரை ஆகிய ஊர்களை சேர்ந்த மொத்த வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கான பயிர்க்காப்பீடு தவணை தொகை செலுத்த டிசம்பர் 31–ந் தேதி கடைசி நாள்

திருவாரூர் மாவட்டத்தில் சம்பா–தாளடி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தவணை தொகையை வருகிற டிசம்பர் மாதம் 31–ந் தேதிக்குள் செலுத்தி பயிர்க்காப்பீடு செய்து கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

### பயிர்க்காப்பீடு

திருவாரூர் மாவட்ட கலெக்டர் நடராசன் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் கூறி யிருப்பதாவது:–

2013–2014–ம் ஆண்டில் சம்பா, தாளடி நெல் சாகுபடி செய்துள்ள அனைத்து விவ சாயிகளும் வருகிற டிசம்பர் மாதம் 31–ந் தேதிக்குள் பிரீ மியத்தொகையை (தவணைத் தொகை) செலுத்தி பயிர்க்காப் பீடு செய்து கொள்ள வேண் டும்.

வங்கிகளில் கடன் பெற்ற அனைத்து விவசாயிகளுக்கும் சம்பந்தப் பட்ட வங்கிகளே கட்டாயம் காப்பீடு செய்ய வேண்டும். வங்கிகளில் கடன் பெறாத விவசாயிகள் தங்கள் சுய விருப்பத்தின் அடிப்படை யில் டிசம்பர் 15–ந் தேதிக்குள் பயிர் காப்பீடு செய்து கொள்ள வேண்டும்.

**<u>காப்பீட்டுத் தொகை விவரம்</u>**

நடப்பு காரீப் பருவத்தில் திருவாரூர் மாவட்டத்தில் நெற்பயிருக்கு ஏக்கருக்கு சாதாரண காப்பீட்டுத்தொகை ரூ.12 ஆயிரத்து 944. இந்த காப்பீட்டிற்கு பிரீமியத் தொகை காப்பீட்டில் 2 சதவீ தம் அதாவது ரூ.258 ஆகும்.

கடன் பெற்ற சிறு, குறு மற் றும் இதர விவசாயிகள் பிரி மீயத்தொகையில் 50 சதவீத தொகையை கட்டினால் போதுமானது. மீதமுள்ள 50 சதவீத தொகை ரூ.129–யை தமிழக அரசே செலுத்திவிடும். கடன் பெறாத சிறு, குறு விவ சாயிகளுக்கு பிரிமீயத் தொகை யில் 55 சதவீதம் தொகையை தமிழக அரசு செலுத்தும். மீத முள்ள ரூ.116–யை மட்டும் சம்பந்தப்பட்ட விவசாயிகள் தங்கள் வங்கி கணக்கு உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் அல்லது வங்கி யில் செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**<u>கூடுதலாக காப்பீடு செய்யலாம்</u>**

விருப்பத்தின் அடிப்படை யில் கூடுதலாக 150 சதவீதம் வரை காப்பீடு செய்ய விரும்பும் விவசாயிகள் கூடுதல் காப் பீட்டுத்தொகை ஒரு ஏக்கருக்கு ரூ.11 ஆயிரத்து 328–க்கு, பிரீமியமாக 16 சதவீதத்தொகை ரூ. ஆயிரத்து 812 செலுத்த வேண்டும்.

கூடுதல் காப்பீட்டிற்கான பிரிமீயத்தொகை ரூ. ஆயிரத்து 812–ல் 50 சதவீத தொகையை தமிழக அரசே செலுத்தும். கூடுதல் காப்பீட்டிற்கான மீத முள்ள ரூ.906–யை செலுத்தி விருப்பப்பட்ட விவசாயிகள் கூடுதல் காப்பீடு செய்து கொள்ளலாம். பயிர்க்காப்பீடு குறித்த மேலும் விவரங்களுக்கு தேசிய வேளாண்மை காப்பீட்டுக்கழக மாவட்ட சேவை மைய ஒருங்கிணைப்பாளரை 9443712020 என்ற செல்போன் எண்ணில் தொடர்பு கொள்ள வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## கடலூர், பெருமாள் ஏரியை தூர் வார வேண்டும் கலெக்டரிடம் விவசாயிகள் கோரிக்கை மனு

6,500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் பெருமாள் ஏரியை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும் என கலெக்டர் கிர்லோஷ்குமாரிடம் விவசாயிகள் கோரிக்கை மனு கொடுத்தனர்.

வாலாஜா ஏரி பாசன விவசாயிகள் நல சங்க செயலாளர் ராமானுஜம், பிரநிதி சாரங்கபாணி மன்றும் விவசாயிகள் கடலூர் மாவட்ட கலெக்டர் கிர்லோஷ்குமாரிடம் கொடுத்த கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:–

<u>பெருமாள் ஏரி</u>

கடலூர் மாவட்டம், சிதம்பரம் பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் உள்ளது பெருமாள் ஏரி. 16 கிலோ மீட்டர் நீளம் உள்ள இந்த ஏரி, 6,500 ஏக்கர் நஞ்சை நிலங்களுக்கு பாசனம் அளித்து வருவதுடன் வாலாஜா ஏரியில் இருந்து வெளியேரும் உபரி நீரின் வடிகாலாகவும் உள்ளது. என்.எல்.சி.யின் கழிவு மண்ணால் ஏரி தூர்ந்து போய் பாசன நீர் ஏரியினுள் செல்லாமல் பரவனாறு கலுங்கல் வழியாக உப்பனாறு மூலம் கடலில் கலந்து வீணாகிறது.

இதனால் பெருமாள் ஏரியின் மூலம் பாசன வசதி பெறும் நிலங்களுக்கு போதிய தண்ணீர் வசதி கிடைக்காததால் சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. மேலும் வாலாஜா ஏரி பாசனப்பகுதிகளில் உள்ள விளை நிலங்களில் தண்ணீர் புகுந்து விடுவதால் பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. ஏரியை தூர்வார ரூ.25 கோடிக்கு திட்டம் தீட்டியும் பயன் ஏதும் இல்லை. எனவே வாலாஜா ஏரி, மிடில் பரவனாறு, பெருமாள் ஏரி ஆகியவற்றை நேரில் பார்வையிட்டு ஏரிகளை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும்.

<u>தரைப்பாலம் அமைக்க வேண்டும்</u>

1993–ம் ஆண்டு பொதுப்பணித்துறை சிறப்பு திட்டத்தின் மூலம் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படுவதை தடுக்க மிடில் பரவனாறுக்கு இருபுறமும் வெள்ள தடுப்புக்கரை அமைக்கப்பட்டது. ஆனால் ஆறு பள்ளமாகி சாலை துண்டிக்கப்பட்டு இருபுறமும் கும்மடிமூலை–மேல புதுப்பேட்டைக்கு தார் சாலை பயனற்று பொதுமக்கள் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

ஆரம்பகாலத்தில் ஆற்றின் குறுக்கே தரை பாலம் அமைக்க ரூ.1 கோடி செலவாகும் என கூறப்பட்டது. தற்போது ரூ.6 கோடியே 50 லட்சம் தேவை என கோட்டப்பொறியாளர் தெரிவித்துள்ளார். இதற்கான திட்ட அறிக்கையை தயார் செய்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரையிலும் எந்தவித நடவடிக்கையும் இல்லை. எனவே சிறப்பு கவனம் செலுத்தி தரைப்பாலம் கட்டும் பணியை விரைந்து முடிக்க ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

## பெரம்பலூர் மாவட்டத்தில் 3½ லட்சம் விவசாயிகளுக்கு ரூ.22 கோடியில் நலத்திட்ட உதவிகள்

வேளாண்மைத்துறையின் மூலம்¢ ரூ.21கோடியே 97 லட்சத்து 14 ஆயிரத்து 600 மதிப்பில் பல்வேறு நலத் திட்டங்களின் மூலம் 3 லட்சத்து 34ஆயிரத்து 463 விவசாயிகள் பய னடைந்துள்ளனர்.

**கலெக்டர் கலந்துரையாடல்**

பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மைத்துறையின் மூலம் பல்வேறு நலத் திட்டங்கள் விவசாயிகளுக்கென்று சிறப்பான முறையில் செயல் படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட கலெக்டர் விவசாயி களுக்கு வழங்கப்படும் திட்டங்கள் அவர்களுக்கு பயனுள்ள வகையில் இருக்கிறதா என் பதை அறிந்து கொள்ளும் வகையில் சம்பந்தப்பட்ட விவசாயிகளின் விளை நிலங் களுக்கே நேரடியாக சென்று பார்வை யிட்டு ஆய்வு செய்து அந்த விவசாயிகளிடம் திட்டத்தின் பயன்கள் குறித்து கலந்துரையாடினார்.

அதன்படி வேப்பூர் பகுதிக் குட்பட்ட எழுமூர், ஆண்டி குரும்பலூர். பெருமத்தூர் ஆகிய கிராமங்களுக்கு சென்று “ஒரு ஹெக்டேரில் 1 லட்சம் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று மக்காச்சோளம் மற்றும் பருத்தி பயிரிட்டுள்ள அமைக்கப்பட்டுள்ள 7 விவசா யிகளின் மக்காச் சோளம் மற்றும் பருத்தி செயல் விளக்க தளைகளையும், பார்வையிட்டு விவசாயி களிடம் கலந்துரை யாடினார்.

அதன் பின்னர் வேளாண் மைத் துறையில் செயல் படுத்தப்பட்டு வரும் திட்டங் கள் குறித்து செய்தியாளர் களிடம் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

**செயல்விளக்க திடல்கள்**

பெரம்பலூர் மாவட்டத்தில் அதிக அளவில் பயிரிடப்படும் மக்காச்சோளம் மற்றும் பருத்தியின் உற்பத்தி திறனை அதிகப்படுத்தி வருவாயை பெருக்குவதற்கு வேளாண் மைத் துறையின் மூலம் ஒவ்வொரு வருவாய் கிராமங் களிலும் 5 விவசாயிகள் தேர்ந் தெடுக்கப்பட்டு “ஒரு ஹெக் டேரில் 1 லட்சம் ” திட்டத்தின் கீழ் செயல்விளக்க பயிற்சிகள்

அளிக்கப்பட்டது. இப்பயிற்சிக் கான செயல் விளக்க திடல்கள் ஒவ்வொரு கிராமங்களிலும் அமைக்கப் பட்டுள்ளது.

அதனடிப்படையில் வேப்பூர் பகுதிக்குட்பட்ட எழுமூர், ஆண்டிகுரும்பலூர். பெருமத்தூர் ஆகிய கிராமங் களில் அமைக்கப் பட்டுள்ள 7 விவசாயிகளின் மக்காச் சோளம் மற்றும் பருத்தி செயல் விளக்க திடல்களை பார்வையிட்டு ஆய்வு செய்தோம். இத்திட்டம் மிகவும் பயனுள்ள வகையில் அமைந்திருப்பதாக விவசாயிகள் கருத்து தெரிவித் தனர். மேலும் 16 வேளாண்மை ஆய்வு அலுவலர்கள் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் சென்று இத்திட்டம் குறித்து ஆய்வு மேற்கொண்டுள் ளனர்.

<u>3½ லட்சம் விவசாயிகள்</u>

வேளாண்மைத்துறையின் மூலம் 2011-2012 மற்றும் 2012-2013 நிதியாண்டுகளில் ரூ.21கோடியே 97லட்சத்து 14 ஆயிரத்து 600 மதிப்பில் பல் வேறு நலத்திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு 3லட்சத்து 34 ஆயிரத்து 463 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

அட்மா திட்டத்தின்கீழ் உயர் தொழில்நுட்பங்களை அறியவும், செயல்விளக்கம் மற்றும் கண்டுணர் சுற்றுலா வாயிலாக விவசாயிகள் தொழில் நுட்பத்தை அறிந்து கொள்ளும் வகையில் ரூ.78.55 லட்சம் மதிப்பில் செயல் விளக்கங்கள் அளித்து, விவசா யிகள் தற்போதைய தொழில் நுட்பத்தை அறிந்து கொள்ளும் வகையில் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர். இதன் மூலம் 13 ஆயிரத்து 93 விவசா யிகள் பயனடைந்துள்ளனர்.

<u>நடப்பாண்டு ரூ.3½ கோடி</u>

ஆகமொத்தம் 2011-2012 மற்றும் 2012-2013 நிதியாண்டு களில் ரூ.21கோடியே 97 லட்சத்து 14 ஆயிரத்து 600 மதிப்பில் பல்வேறு நலத் திட் டங்கள் செயல்படுத்தப் பட்டு 3லட்சத்து 34ஆயிரத்து 463 விவசாயிகள் பயனடைந் துள்ளனர். மேலும் நடப்பாண் டில் பல்வேறு நலத்திட்டங் களுக்காக ரூ.3கோடியே 51 லட்சத்து 75 ஆயிரத்து 550 மதிப்பில் நிதி ஒதுக்கீடு செய் யப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அப்போது, மாவட்ட கலெக் டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகசபை, பெரம்பலூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சேகர், ஆகியோர் உடன் இருந்தனர்.

## பெருமத்தூரில் விவசாயிகள் பாலை கொட்டி ஆர்ப்பாட்டம்



பெருமத்தூரில் விவசாயிகள் பாலை கொட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

**<u>பாலை கொட்டி ஆர்ப்பாட்டம்</u>**

குன்னம் அருகே பெருமத் தூர் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்கமும் இணைந்து பால் லிட்டருக்கு ரூ. 5 விலை உயர்த்தி தர கோரியும், மாட்டு தீவனம் மானிய விலையில் வழங்க கோரியும், 15 நாட்களுக்கு ஒருமுறை பால் பணம் வழங்க கோரியும், பெருமத்தூரில் 100 நாள் வேலை செய்தவர்களுக்கு 4 மாதங்களாக கூலி கொடுக் காகததை கண்டித்தும், வங்கிக ளில் பயிர் கடன் வழங்காததை கண்டித்தும், கல்வி கடன் வழங்க கோரியும், தனிநபர் கழிப்பறை திட்டத்தை செயல் படுத்த கோரியும், பெருமத்தூர் புத்தர் சிலை அருகே ரோட்டில் பாலை கொட்டி கண்டன ஆர்ப் பாட்டம் நடை பெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு விவசாய சங்க தலைவர் இளங்கோவன் தலைமை தாங்கினார். விவசாயிகள் சங்க வட்ட செயலாளர் ஜெய்சங்கர் முன்னிலை வகித்தார். கண்டன ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் செல்லதுரை சிறப்புரை ஆற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் கரும்பு விவசாயிகள் சங்க தலைவர்கள் அன்பழகன், வட்ட தலை வர்கள் சின்னகண்ணு, கோவிந்தராசு, பொருளாளர் ரெங்கநாதன், பால் சங்க தலைவர் பொன்னுசாமி, சதாசிவம், வேல்முருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## நிலக்கோட்டை அருகே விவசாய பாசன கால்வாயை தூர்வாரப்பட்டது



திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அருகே உள்ள வைகை ஆற்றுப்படுகையையொட்டி பெரியாறு கால்வாய் அமைக்கப்பட்டது. இந்த கால்வாய் மூலம் விவசாயத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. இந்த கால்வாய் இருந்த வெளியேறும் தண்ணீர் வீணாகாமல் இருக்க வைகை அணையில் இருந்து மதுரை மாவட்டம் கள்ளந்திரி வரை சிமெண்டு கால்வாய் அமைக்கப்பட்டது. இதில் சிவஞானபுரம் அருகே 11–வது மடையாக இருந்து பிள்ளையார்நத்தம், சித்தர்கள்நத்தம், எத்திலோடு உள்ளிட்ட பகுதியை சேர்ந்த விவசாயிகள் இந்த கால்வாய் மூலம் விவசாயம் செய்து வந்தனர். இந்நிலையில் 11–வது மடை கால்வாய் மேடு பள்ளமாக இருந்ததால் வாய்க்காலில் தண்ணீர் தேங்கி கிடக்கிறது. இதனால் பாசனத்திற்கு சரியாக தண்ணீர் கிடைப்பதில்லை.

எனவே இந்த கால்வாயை சரிசெய்ய விவசாயிகள் பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்தனர். ஆனால் அந்த கால்வாய் செய்யப்படவில்லை. இந்நிலையில் விவசாயிகளே முன்வந்து கால்வாயில் இருந்த மேடு பள்ளங்களை சரிசெய்து கொண்டிருந்தனர்.

இந்த தகவல் அறிந்த நிலக்கோட்டை ஒன்றிய குழு தலைவர் (பொறுப்பு) யாகப்பன் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, ஊராட்சி ஒன்றிய பொதுநிதியில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்து வாய்க்காலை சீரமைத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். அம்மைய

நாயக்கனூர் பேரூராட்சி தலைவர் தண்டபாணி, நகர செயலாளர் உதயகுமார், நிலக்கோட்டை பேரூராட்சி தலைவர் சேகர் ஆகியோர் உடன் சென்றனர்.

## விருதுநகர் மார்க்கெட் நிலவரம்: சமையல் எண்ணை, உளுந்து விலை குறைந்தது

## பொருட்களின் விற்பனையில் மந்த நிலை



விருதுநகர் மார்க்கெட் டில் சமையல் எண்ணை, உளுந்து, பாசிப்பயறு ஆகியவற்றின் விலைகள் குறைந்து உள்ள நிலை யில், பொருட்களின் விற் பனையில் மந்த நிலையே காணப்பட்டது.

**<u>உளுந்து</u>**

விருதுநகர் மார்க்கெட்டில் உளுந்து 100 கிலோ மூடைக்கு ரூ.200 விலை குறைந்து ரூ.3400 முதல் ரூ.4400 வரையிலும், உருட்டு உளுந்தம் பருப்பு ரூ.4,600 முதல் ரூ.5,800 வரையிலும், தொலி உளுந்தம் பருப்பு ரூ.4,200 முதல் ரூ.4,400 வரையிலும் விற்பனை ஆனது. துவரை 100 கிலோ மூடை ரூ.3,800 முதல் 4,200 வரையிலும், துவரம் பருப்பு ரூ.5,800 முதல் ரூ.6,800 வரையிலும் விற்பனை ஆனது. பாசிப்பயறு 100 கிலோ மூடைக்கு ரூ.300 விலை குறைந்து 4,700 முதல் ரூ.5,400 வரை விலை சொல்லப்பட்டது. பாசிப் பருப்பு 100 கிலோ மூடை ரூ.7,000 முதல் ரூ.7,800 வரையிலும் விற்பனை செய்யப் பட்டது. மல்லி லயன் ரகம் 40 கிலோ ரூ.2900 முதல் ரூ.3,050 வரையிலும், மல்லி நாடு

ரகம் ரூ.4,000 முதல் ரூ.4,500 வரையிலும் விற்பனை ஆனது. வத்தல் சம்பா ரகம் குவிண்டால் ரூ.5,800 முதல் ரூ.6,700 வரையிலும், ஏ.சி. வத்தல் ரூ.7,000 முதல் ரூ.7,500 வரையிலும், முண்டு வத்தல் ரூ.4,000 முதல் ரூ.5,800 வரையிலும், சோடை வத்தல் ரூ.1,500 முதல் ரூ.1700 வரையிலும் விலை சொல்லப் பட்டது.

**சமையல் எண்ணை**

விருதுநகர் எண்ணை மார்க்கெட்டில் கடலை எண்ணை 15 கிலோவுக்கு ரூ.25 விலை குறைந்து 1,375 ஆகவும், நல்லெண்ணை 15 கிலோ ரூ.3,267 ஆகவும், தேங்காய் எண்ணை ரூ.1,605 ஆகவும், சூரிய காந்தி எண்ணை ரூ.1500 ஆகவும் விற்பனை ஆனது.

நிலக்கடலை பருப்பு 80 கிலோவுக்கு ரூ.100 விலை குறைந்து ரூ.3,900 ஆகவும், கடலை புண்ணாக்கு 100 கிலோவுக்கு ரூ.3,800 ஆகவும், எள் புண்ணாக்கு 65 கிலோ ரூ.2,415 ஆகவும் விற்பனை ஆனது. பாமாயில் 15 கிலோ வுக்கு ரூ.10 விலை குறைந்து ரூ.940 ஆக விற்பனை செய்யப் பட்டது.

**சீனி**

விருதுநகர் சீனி மார்க்கெட்டில் சீனி குவிண்டால் ரூ.10 விலை உயர்ந்து ரூ.3,235 ஆகவும், கொண்டைக்கடலை குவிண்டாலுக்கு ரூ.100 விலை குறைந்து ரூ.3,950 ஆகவும், பொரி கடலை 55 கிலோவுக்கு ரூ.3,060 ஆகவும், பட்டாணி 100 கிலோ ரூ.2,950 ஆகவும், பட்டாணி பருப்பு ரூ.3,100 முதல் ரூ.3,400 வரையிலும், மசூர் பருப்பு ரூ.4,150 முதல் ரூ.4250 வரையிலும், ரவை 90 கிலோரூ.3,080 ஆகவும், மைதா 90 கிலோ ரூ.3,110 ஆகவும் விலை சொல்லப்பட்டது.

**காபி**

விருதுநகர் காபி மார்க்கெட்டில் காபி பிளாண்டேசன் பிபி ரகம் 50 கிலோ ரூ.9,250 ஆக வும், ஏ ரகம் ரூ.9,900 ஆகவும், சி ரகம் ரூ.8000 ஆகவும், ரோபஸ்டா பிபி ரகம் ரூ.7,100 ஆக வும், பிளாக் பிரவுன் ரகம் ரூ.6,800 ஆகவும் விற்பனை ஆனது. விருதுநகர் மார்க் கெட்டில் கடந்த வாரமும் பொருட்களின் விற்பனையில் மந்த நிலையே காணப்பட் டது.